
# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 93 பங்குனி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162













ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au



# பூர்வகுடி மக்களிடையே உயரும் உயிர்மாய்ப்புகள்!

● **சியாமளா யோகேஸ்வரன்**

உலகின் பழமையான பண்பாடுகளில் அவுஸ்ரேலியப் பழங்குடியினரதும், அவுஸ்ரேலியத் தீவக மக்களினதும் பண்பாடு மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இந்தப் பண்பாடானது அம்மக்களின் உள உறுதியை மேம்படுத்துவதாகவே காணப்படுகின்றது. காலனித்துவக் குடியேற்றம் நடைபெற முன்னரோ அல்லது கடந்த ஐம்பது ஆண்டு காலமாகவோ அவுஸ்ரேலியப் பழங்குடியினர் மற்றும் தீவக மக்களிடையே தற்கொலைகள் மிகவும் அரிதாக நிகழ்ந்தன.

1980கள் முதல் தற்கொலை விகிதங்கள் அதிகரித்து, இன்று இந்த மக்கள் தொகையில் ஐந்தாவது முக்கியமான மரண காரணமாகத் தற்கொலைகள் காணப்படுகின்றன.

காலனித்துவ ஆதிக்கம் பெற்ற நாடுகளில் உள்ள பூர்வீக மக்களிடையே 'மிக்க துயரத்தையும் கோபத்தையும்' வெளிப்படுத்தும் அறிகுறிகளில் ஒன்றாகத் தற்கொலைகள் விவரிக்கப்படுகின்றன. அந்தக் கோபமும் துயரமும் ஏற்படுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை விக்டோரிய மரண விசாரணை அறிக்கை குறிப்பிடுகின்றது.

- கடுமையான வாழ்க்கை நிகழ்வுகள்
- பிற இனங்களின் வெறுப்பும் இனவெறிச் செயல்களும்
- சிறைத்தண்டனை அனுபவம்
- வேலை இழப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை
- நிதி தொடர்பான பிரச்சினைகள்
- மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடும்
- குடும்பத்தை விட்டு வெளியே வாழும் நிலைமை
- தனிநபர் மற்றும் குடும்பக்கருத்து மோதல்கள்
- மனநோய், மன அழுத்தம் மற்றும் உளவியல் சிரமங்கள்

தற்கொலைகள் ஏற்படுத்தும் பிரிவின் வலியானது குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் ஒரு வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் இவர்களின் தற்கொலையைத் தடுப்பதற்குச் சரியான திட்டங்களையோ, தடுப்பு முன்னேற்பாடுகளையோ மேற்கொள்வதற்கு ஆய்வுகள் மூலம் சரியான தரவுகள் கிடைக்காமையே ஒரு மூலகாரணம் என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

2020 முதல் 2024 வரை தற்கொலை செய்து கொண்ட பூர்வகுடி மக்களில் 56.6 சதவீதமானோர் 35 வயதுக்கு கீழ் உள்ளவர்களாக இருந்தனர், அதே வயதுப் பிரிவில் தற்கொலை செய்து கொண்டவர்களில் 30 சதவீதமானோர் மட்டுமே பூர்வகுடியினர் அல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் வெளியிடப்பட்ட விக்டோரியாவின் மரண விசாரணை அதிகாரியின் அறிக்கையானது 2022 முதல் பூர்வகுடி மக்களின் தற்கொலை மரணங்களில் 42 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. இதில் தற்கொலை செய்த ஆண்களின் சராசரி இறப்பு வயது 37 என்றும் பெண்களின் வயது 29.6 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விக்டோரியாவில் உள்ள பூர்வகுடி மக்களில் நிகழ்ந்த 54.9 சதவீதமான தற்கொலைகளில் 45.1 சதவீதம் நகர்புறங்களிலேயே நிகழ்ந்திருக்கின்றது. மரணத்தின் போது 75 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் மனநல நோய்களுக்கான மருத்துவ அறிகுறிகளைப் பெற்றிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

முன்னணி மனநல நிபுணர் டாக்டர் டிரேசி வெஸ்டர்மன் மற்றும் The Westerman Jilya Institute இணைந்து வெளியிட்ட ஆய்வறிக்கையின்படி, அவுஸ்ரேலியாவில் பூர்வகுடி இளையோரின் மனநிலை குறித்த விரிவான தரவுகளில் 42 சதவீதம் பேருக்கு தற்கொலை சிந்தனைகள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. 2007 முதல் 2022 வரை மனநல சேவைகளை நாடிய 1226 பூர்வகுடி இளையோரில் நான்கில் ஒருவர் ஒருமுறை அல்லது அதற்கு மேற்பட்டமுறை தற்கொலைக்கு முயன்றுள்ளனர் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

நீதிமன்றத் தரவுகளின் படி, 2020 முதல் 2023 வரை தற்கொலைக்கு வழி வகுத்த காரணிகளில் மனநல பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகள், போதைப்பொருள் பயன்படுத்தல், குடும்ப வன்முறையை சந்தித்தல் மற்றும் குற்றத்தொடர்பு ஆகியவை மிகமுக்கியமான காரணங்கள் எனக் தெரியவருகின்றது.

எனவே, முன்னேற்றமான தலையீட்டுத் திட்டங்களை வடிவமைக்க உள்ளூர் மட்டத்தில் பூர்வகுடிகளின் பிரச்சினைகள் தொடர்பான தரவுகள் மிகவும் தேவையானவை. பூர்வகுடி மக்களுக்கு தற்கொலை பற்றிய துல்லியமான தகவல்களையும் விழிப்புணர்வையும் வழங்குவது மிக முக்கியமாகின்றது. மருத்துவ ஆய்வுக்கான தரவுகளை மட்டுமே பயன்படுத்தியதால் சில சமூக மட்டத்திலான காரணிகளை அளவிட முடியவில்லை என்பதுடன் சில முக்கியமான கேள்விகளுக்கு பதில் தரப்படாததும் ஒரு குறையாகவே பார்க்கப்படுகின்றது. மருத்துவப் பணியாளர்களின் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பூர்வகுடியினர் தயங்கியிருப்பதும் சரியான தகவல்களைத் திரட்டுவதற்குத் தடையாக இருந்திருக்கின்றது.

சமூக உறவுகளிடையேயான இணைப்பு, விளையாட்டுகளில் பங்கேற்பது போன்றன தற்கொலை நடத்தைகளை குறைக்கும் காரணிகளாக உள்ளன. அத்துடன் 'பண்பாட்டுத் தொடர்ச்சி' (Cultural Continuity) சார்ந்த அம்சங்கள், பண்பாட்டு அடையாளத்தை பாதுகாக்கவும், சமூக பண்புகளைக் காப்பாற்றவும் உதவுவதால், அவை தற்கொலை அபாயத்தைக் குறைக்கும் திறன் கொண்டவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுகளில் அல்லது சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பது, குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பது, முழுநேர வேலை செய்தல் ஆகியவை தற்கொலை எண்ணங்களை ஏற்படுத்தும் வாய்ப்பைக் குறைக்கும். வேலை பார்த்தல் பாதுகாப்புணர்வைக் கொடுத்து தற்கொலை போன்ற எண்ணங்களைக் குறைக்க உதவுகிறது. மாறாக, தற்காலிக வேலை அல்லது ஒப்பந்த வேலை செய்தல், வீடற்ற நிலை, சூதாட்டப் பிரச்சினை போன்றவை தற்கொலை அல்லது தன்னைக் காயப்படுத்திக் கொள்ளும் எண்ணங்களை இரண்டு மடங்கு அதிகரிக்கச் செய்கின்றன. பூர்வகுடிப் பெண்களை எடுத்துக் கொண்டால் பகுதி நேரமாக வேலை செய்தல், விவாகரத்து அல்லது உறவுச்சிக்கலை அனுபவித்தல் ஆகியவை இத்தகைய எண்ணங்களை அதிகரிக்கும் முக்கியமான காரணிகளாக உள்ளன.

பூர்வகுடி மற்றும் தீவக மக்களுக்கான தற்கொலைத் தடுப்பு நடவடிக்கைகள், சமூக மற்றும் பண்பாட்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும். இதற்கு அந்த சமூகத்தின் தலைமையிலான மற்றும் குழு சார்ந்த ஆய்வுகள் அவசியம். மேலும், மருத்துவ சேவைகளில் தொகுக்கப்படும் தகவல்களை பயன்படுத்தி, தற்கொலை தடுப்பு திட்டங்களை மேம்படுத்துவது பலனளிப்பதாக இருக்கும். பூர்வகுடியினர் மற்றும் தீவுமக்களின் தற்கொலைக்கான காரணிகளைக் குறைக்க அரசு, மருத்துவம், சமூக ஆராய்ச்சி மற்றும் சமூக அமைப்புகள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

**10 am to 8 pm**

SST Spices & Things
Where quality meets community

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 93 பங்குனி 2025 தொ.பே:1800 960 162

# சமூக சேவையாளர்களா..?

ஆஸ்திரேலியாவில் விருதுகளுக்கு பின்னால் ஓடும் எருதுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வீதிக்கொரு கட்சி போல புலம்பெயர் நாடுகளில் ஆளுக்கொரு அமைப்பு என்ற ரீதியில் ஓடிக்கொண்டிருக்கிறனர் ஆஸ்திரேலிய தேசத்து தமிழர்.

அமைப்புகளை உருவாக்கி, வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பது போல விருது வழங்கும் நிகழ்வுகளை நடத்தி – பத்துபேரை அழைத்து விருது கொடுத்து அவர்களை அமைப்புகளில் இணைய வைப்பது இதன் பின்னணியிலுள்ள யுக்திகளில் ஒன்றாகும்.

சில அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்புகளை வைத்துக்கொண்டு, அவர்கள் ஊடாக விருதுகளை வழங்கி, ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றதை காணமுடிகின்றது.

ஆஸ்திரேலிய தினத்தின்போது அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமூக சேவையாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் உலாவந்தன.

இவ்வாறு உலாவிய படங்களில் சமூக சேவையாளர்கள் எங்கே உள்ளனர் என்று கால கண்ணாடியை செருகிப்பார்த்த போது இரண்டொருபேர் தென்பட்டனர். இதனையடுத்து ஏனையோர் தொடர்பில் வினவியபோது திடுக்கிடும் தகவல் வெளியானது.

உக்ரைன் மற்றும் காசா போன்ற போர்பகுதிகளில் சிக்கித்தவித்தவர்களுக்கு இவர்கள் சமூக சேவை செய்தவர்களாம். அதனால் தான் அவர்களை ஆஸ்திரேலிய தேசத்தில் காண முடியவில்லையாம்.

அவரவர் தங்களது சொந்த நலன்களுக்காக அமைப்புகளை உருவாக்கி வைத்து கூத்துப்போடும், அமைப்புகளால் அவர்களுக்குள் விருதுகளை கொடுத்து மகிழ்வதை நாம் குறைகூற முடியாது. அது அவர்களுக்குரிய சுதந்திரம்.

ஆனால் ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக விருது வழங்கி மகிழ வைக்க முற்படுவது தமிழர்கள் சார்ந்து செயற்படும் உன்னதமாக செயற்பாட்டளார்களை முடக்குவதற்கான முயற்சியாகவே கருதப்படுகின்றது.

தற்போது விருது என்பதன் அர்த்தம் பலருக்கு புரிவதே இல்லை. சமூகத்திற்கு சிறந்த செயற்பாட்டை செய்த ஒருவருக்கு வழங்கப்படுகின்ற உன்னதமான கௌரவமே விருதாகும். எனவே, விருது பெற தகுதியானவர்களா என அதனை வழங்குகின்ற– வாங்குகின்றவர்கள் தங்களுக்கு தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

சமூக அமைப்புகள், ஒருவரை மேடையில் ஏற்றி கௌரவிக்கும் போது அது அந்த தனிமனிதனை மட்டும் சார்ந்தது அல்ல. அந்த மனிதனை அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டுவதாகவே அமைகிறது. அவரைப்போலவே இந்த சமூகத்துக்காக தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே தோற்றம்பெற வேண்டும். ஆகவே விருதுக்கு தெரிவுசெய்யப்படுபவர் பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

சமகாலத்திலும் – எதிர்காலத்திலும் மக்களால் பேசப்பட வேண்டியவராக இருக்கவேண்டுமல்லவா..?

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களால் விருது வழங்கப்பட்டவர்களில், அகதிகளின் பணத்தை ஏப்பமிட்ட ஒருசிலரும் உள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.

இவர்கள்தான் தமிழர் தரப்பின் முன்மாதிரியானவர்கள் என பரிந்துரை செய்யும் தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் நிச்சயம் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் மோசடிக்கு துணைநின்றவர்களாகவே அவர்களையும் அடையாளப்படுத்த நேரிடும்.

முகபுத்தகங்களில் படங்களை பகிரும் போதும் தாம் இந்த சமூகத்துக்கு எவ்விதமான முன்மாதிரி திட்டங்களை செய்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்க வேண்டும்.

வாக்கு வேட்டையை மாத்திரம் குறிவைத்து செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, விருது பெறுபவர் உண்மையான சமூக செயற்பாட்டாளரா என்பது தெரியாது.

சமூக செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியில் உங்களால் அடையளப்படுத்தப்படும் நபர்களால் நீங்கள் தமிழ் சமூகத்துக்கு தான் நேர்மையாக இல்லை. உங்களை நம்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காவது நேர்மையாக இருங்கள்..


# எனது வழி 'கிரீன்வே'

பசுமைக் கட்சியின் வேட்பாளர் பழனியப்பன் சுப்பிரமணியனுக்கு அரசியல் என்பது ஒரு சாதாரண கருத்தியல் செயற்பாடு அல்ல. அது மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. கணினித் தொழில்நுட்பவியல் நிபுணராக தனது புலம்பெயர் வாழ்க்கையைத் தொடங்கியவர் , அரசாங்கத்தின் செயலற்ற தன்மையின் காரணமாக ஏற்பட்ட கோரமான ஆபத்துகளை நேரடியாகக் கண்டிருக்கிறார். காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயற்திட்டங்களில் அரசாங்கத்தின் மெத்தன நடவடிக்கைகள், கோவிட் -19 தொற்றுநோயின் போது தவறான தகவல் பரவல் மற்றும் அலட்சியத்தின் பேரழிவு விளைவுகள் வரை இவரை பாதித்திருக்கின்றன. இவ்வாறான பாதிப்புகளுக்கு எதிராக களப்போராளியாக இருந்தவர் தற்பொழுது தேர்தல் அரசியலில் களமிறங்கியிருக்கிறார். வரவிருக்கும் 2025 மாகாணத் தேர்தலில் கிரீன்வே தொகுதியில் போட்டியிடவிருக்கிறார். எதிரொலிக்காக அவர் வழங்கிய நேர்காணல் இது.

**நேர்கண்டவர்:**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



## பழனியப்பன் சுப்பிரமணியனுடன் ஒரு நேர்காணல்

**எதிரொலி : அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடி அன்றாட ஆஸ்திரேலியர்களைப் பாதிக்கும் இந்தக் கடுமையான சூழ்நிலையில், குடும்பங்கள் மீதான நிதி அழுத்தத்தைக் குறைக்க மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்ய தேவையான எந்தவிதமான கொள்கைகளை வலியுறுத்துவீர்கள்?**

*பழனியப்பன் : பெரிய நிறுவனங்கள், கோடீஸ்வரர்கள் மற்றும் பணக்காரச் சொத்து முதலீட்டாளர்களின் பேராசை நடவடிக்கைகளின் விளைவுகளே நாம் இன்று காணும் கடுமையான வாழ்க்கைச் செலவு நெருக்கடிகளுக்கு காரணமாகும். அவர்கள் தங்கள் நியாயமான வரிப் பங்கைச் செலுத்தத் தூண்டுவதற்கு தேவைப்படும் துணிச்சலான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இரண்டு பெரிய கட்சிகளும் (லேபர், லிபெரல்) அவர்களுக்குப் பெரிய அளவிலான வரிச் சலுகைகளைத் தொடர்ந்து வழங்குகின்றன. PRRT (பெட்ரோலிய வள வாடகை வரி), புதைபடிவ ( fossil fuel ) எரிபொருள் துறைக்கு வரி விதிப்பதை விட, HECS கடன் மூலம் உயர் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து அரசாங்கம் அதிகமாக வசூலிக்கும் கொடுமையான தருணத்தில் நாம் இப்போது இருக்கிறோம். நம் கண்களுக்கு புலப்படாத பணக்காரர்களுக்கு எல்லாவிதமான நலன்களையும் செய்யும் ஒரு அமைப்பு இரண்டு பெரிய கட்சிகளுக்கும் வேலை செய்கிறது, ஏனெனில் இரண்டு பெரிய கட்சிகளும் அதே பெரிய நிறுவனங்களிடமிருந்து மில்லியன் கணக்கான டொலரை நன்கொடைகளாகப் பெறுகின்றன. ஆதலால் நம்மை ஏமாற்றுவதற்கு தேவையான மொத்த குத்தகையும் அவர்களிடம் ஏகபோகமாக குவிந்திருப்பதால், இந்த பில்லியனர்கள் நம்மைத் தொடர்ந்து ஏமாற்றுகிறார்கள்*

*பசுமைக் கட்சியினராகிய நாங்கள் எந்தப் பணக்காரர்களிடமும் நன்கொடை கேட்டு கையேந்தி நிற்காமல் சுயாதீனமாகத் தேர்தல் செலவுக் கொள்கைகளை வகுத்துள்ளோம். அந்தத் திட்டத்தின்படி பெரிய நிறுவனங்கள் மற்றும் பில்லியனர்கள் தங்கள் நியாயமான பங்கைச் செலுத்தச் செய்வதன் மூலம் 514 பில்லியன் திரட்ட முடியும். இதன்மூலம் இலவச பல் மருத்துவம் மற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச குழந்தைப் பராமரிப்பு ( Day Care ) போன்றவற்றிற்கு நிதியளிக்க முடியும் . பணக்காரச் சொத்து முதலீட்டாளர்களுக்கு வழங்கும் 176 பில்லியன் வரிச் சலுகைகளை நிறுத்துவதன் மூலம் பணப்பற்றாக்குறையினை குறைக்க முடியும். எல்லோருக்கும் வீட்டு வசதி வழங்கத் தேவையான குறைந்த சதவிகித வட்டியில் வீட்டுக்கடன் வழங்க வங்கிகளை ஒழுங்கு படுத்துவோம், மேலும் வாடகை உயர்வுகளைக் கட்டுப் படுத்தல், பல்பொருள் அங்காடி விலை ஏற்றத்தை சட்டவிரோதமாக்குதல், மாணவர் கடனை ரத்துச் செய்தல் மற்றும் தேசிய அளவில் 50 சென்ட் கட்டணத்தில் பொதுப்போக்குவரத்தைச் செயற்படுத்துதல் போன்ற மக்கள் நலன் பேணும் பல்வேறு கொள்கைகளும் எங்களிடம் இருக்கின்றன.*

**எதிரொலி : பசுமைக் கட்சியானது காலநிலைக் கொள்கைகளை வலுவாக்க, ஆதரவுக்குரல் கொடுத்து வருகிறது . இதன் காரணமாக நாம் அனைவரும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறும் போது, தற்போது புதைபடிவ எரிபொருட்களை சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பான, நல்ல ஊதியம் தரும் வேலைகளை உருவாக்குவதை நீங்கள் எவ்வாறு உறுதி செய்வீர்கள்?**

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# எனது வழி 'கிரீன்வே'

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழனியப்பன்: நியாயமான மாற்றத்திற்கான திறவுகோல் என்பது புதைபடிவ எரிபொருள் நிறுவனங்கள் தங்கள் நியாயமான வரிப் பங்கைச் செலுத்துவதை உறுதி செய்வதே. தற்போது, இரு முக்கியமான கட்சிகளும் நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்களுக்கு ஒவ்வொரு மாதமும் $1 பில்லியனுக்கும் அதிகமான வரிச் சலுகைகளை வழங்குகின்றன. புதைபடிவ எரிபொருள் நிறுவனங்கள் நீண்ட காலமாக இந்த வரிச்சலுகைகளை தள்ளுபடி செய்யும் மசோதாவைத் தவிர்த்து வருகின்றன. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதற்கு தேவையான முதலீடுசெய்வதன் மூலம் நாம் ஆயிரக்கணக்கான நல்ல ஊதியம் பெறும்வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். அந்த வேலைவாய்ப்புகளில் புதைபடிவ எரிபொருள் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிப்பதை பசுமைக் கட்சியானது உறுதி செய்யும்.

குறிப்பாக, 2030 ஆம் ஆண்டுக்குள் நிலக்கரி ஏற்றுமதி படிப்படியாக நிறுத்தப்பட வேண்டும், மற்ற அனைத்து புதைபடிவ எரிபொருள் ஏற்றுமதிகளும் 2040ஆம் ஆண்டுக்குள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம். புதைபடிவ எரிபொருட்களின் சுரங்கங்கள் விரிவாக்கத்தை நிறுத்த விரும்புகிறோம். நமது சுற்றுச்சூழலை மாசுபடுத்துபவர்கள், அவற்றைச் சுத்தம் செய்ய பணம் செலுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். பெரிய நிறுவனங்கள் தங்கள் நியாயமான பங்கைச் செலுத்தச் செய்வதன் மூலம், மக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள மிகுந்த வரிச்சுமை குறைந்து , மிகக்குறைந்த வரி செலுத்தும் நிலை ஏற்படும்.


**எதிரொலி : வாடகை மற்றும் வீட்டு விலைகள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருவதால், பல ஆஸ்திரேலியர்கள் வீடு வாங்க முடியாமல் தவித்து வருகின்றனர். மலிவு விலை மனைகளை அதிகரிக்கவும், பாதுகாப்பான வீட்டு வசதிகளை வழங்கவும் நீங்கள் என்ன நடவடிக்கைகளை முன்மொழிகிறீர்கள்?**

பழனியப்பன் : நமது நாட்டில், வீடு என்பது ஆடம்பர வசதியாக இருந்துவிடாமல் அடிப்படை உரிமையாக மீட்டெடுப்பதில் பசுமைக் கட்சியினர் உறுதியாக உள்ளனர். தொழிற்கட்சி மற்றும் தாராளவாதிகளால் பணக்கார ,சொத்து முதலீட்டாளர்களுக்கு பல தசாப்தங்களாக வழங்கப்பட்ட கட்டுப்படுத்தப்படாத வரிச் சலுகைகளே (மொத்தம் 176 பில்லியன் அளவிலான) இப்போது நாம் அனுபவித்துவரும் நீடித்த வீட்டு விலை மற்றும் வாடகை அதிகரிப்புகளுக்கு வழிவகுத்துள்ளன. இதை எதிர்கொள்ள, நாங்கள் ஒரு பன்முக அணுகுமுறையை முன்மொழிகிறோம்:

1. RBA ரொக்க விகிதத்தை விட ஒரு சதவீதத்தில் வீட்டுக்கடன் வட்டி விகித உயர்வுகளை வரம்பிடுதல்.
2. ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் வாடகை அதிகரிப்பை இரண்டு சதவீதமாகக் கட்டுப்படுத்துதல்.
3. பில்லியனர்கள் இந்தக் கொள்கைகளை ஆபத்து இல்லாத முதலீடுகளாகப் பயன்படுத்துவதைத் தடுக்க நெகடிவ் கியர் மற்றும் மூலதன ஆதாய வரி தள்ளுபடிகளைக் கட்டுப்படுத்துதல்.
4. ஆசிரியர்கள் , செவிலியர்கள், குழந்தை பராமரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் சராசரி $55,000 ஆண்டு வருமானம் ஈட்டும் தொழிலாளிகள் ஆகியோரால் வாங்கக்கூடிய விலையில் வீடுகள் கிடைக்க ஏற்பாடு செய்தல்.
5. நல்ல தரமான வீடுகளை கட்டி வாடகைக்கு விட தேவையான அரசாங்கத்திற்குச் சொந்தமான வீட்டுக் கட்டுமான அமைப்பு முதலான பல திட்டங்களை நாங்கள் வைத்திருக்கிறோம். நாங்கள் பணக்காரச் சொத்து முதலீட்டாளர்களுக்காக அரசியல் செய்யவில்லை. அன்றாடம் பாடுபடும் சாதாரண பொதுமக்களால் இயக்கப்படுவது எங்கள் பசுமைக் கட்சி. செய்யவில்லை. அன்றாடம் பாடுபடும் சாதாரண பொதுமக்களால் இயக்கப்படுவது எங்கள் பசுமைக் கட்சி.

**எதிரொலி : ஒரு புலம்பெயர்ந்தோர் சார்ந்த வேட்பாளராக, அனைத்து குடிமக்களுக்கும் நியாயத்தை உறுதி செய்யும் அதே வேளையில், புதிய ஆஸ்திரேலியர்களுக்கான குடியேற்ற செயல்முறை, வேலை வாய்ப்புகள் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு நீங்கள் என்ன கொள்கைகளை ஆதரிப்பீர்கள்?**

பழனியப்பன் : தொழிலாளர் மற்றும் தாராளவாத அரசாங்கங்கள் பெரும்பாலும் தங்கள் பணக்கார முதலாளிகளின் நலன் சார்ந்தே சிந்திப்பதால் , புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் அச்சத்தைத் தூண்டும் விஷயங்களில் எப்போதும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. சமீபத்தில், அல்பானீஸ் அரசாங்கம் டட்டனின் தாராளவாதிகளுடன் இணைந்துகொண்டு மிகக் கொடுமையான அகதிகள் எதிர்ப்பு



மற்றும் புலம்பெயர்ந்தோர் எதிர்ப்பு தொடர்பான மூன்று மசோதாக்களை விரைவாக நிறைவேற்றியது. ஆனால் பசுமைக் கட்சியினரான நாங்கள் ஆஸ்திரேலியா என்பது ஆயிரம் கலாசாரங்களைச் சேர்ந்த மக்களைக் கொண்ட புலம்பெயர் சமூகங்களின் நாடு என்று உறுதியாக நம்புகிறோம்.

முதலாவதாக, ஆஸ்திரேலியாவில் அடிப்படை மதிப்புகளை பிரதிபலிக்கும் ஒரு குடியேற்ற அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப பசுமைக் கட்சி உறுதிபூண்டுள்ளது - அகதிகளைக் கண்ணியத்துடன் வரவேற்பது, புலம்பெயர்ந்த குடும்பங்களை நியாயமாக ஆதரிப்பது மற்றும் சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பது.

இரண்டாவதாக, சுரண்டப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து திருடப்பட்ட ஊதியத்தை மீட்டெடுக்கத் தேவையான தீர்வுகளைத் தேடும் வகையில், நியாயமான பணிக் குறைதீர்ப்பு மையத்திற்கு தேவையான இலக்கு நிதியை ஈட்டுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். மேலும், இந்த நாட்டிற்குத் தேவையான வேலைவாய்ப்பு மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளை நிரப்ப, ஒவ்வொரு புலம்பெயர்ந்தவருக்கும் அவர்களின் தனித்துவமான திறமைகளைப் பயன்படுத்தி முன்னேறுவதற்கு தேவையான சுதந்திரம் அளிக்க விரும்புகிறோம். ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகக் குடியேறும் திறமையான புலம்பெயர்ந்தோருக்கு தேவைப்படும் வேலைவாய்ப்புகளை அணுகக்கூடிய வழிகளுக்கு நிதியளிப்பதன் மூலம்,திறன் பற்றாக்குறை இடைவெளியைக் குறைத்து, புதிய வருகையாளர்கள் தங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்ய உதவுவதன் மூலம் இதை அடைய விரும்புகிறோம்.

மூன்றாவதாக, ஆஸ்திரேலியாவின் இடம்பெயர்வு முறையானது தங்கள் அன்புக்குரியவர்களை பல தசாப்தங்களாக அல்லது துரதிர்ஷ்டவசமாக அவர்கள் இறக்கும் வரை என்றென்றும் பிரித்து வைத்திருக்கிறது, அதிக செலவுகளுக்கு வழிவகுக்கும் மற்றும் 30 ஆண்டுகள் வரை தாங்க முடியாத காத்திருப்பு நேரங்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்குள் குடும்பம் மற்றும் தம்பதியர் விசா விண்ணப்பங்களின் காலதேக்கத்தை நீக்குவதன் மூலம் குடும்பங்களை விரைவாக மீண்டும் ஒன்றிணைக்க விரும்புகிறோம்.

வேலை தேடுபவர் தகுதி வயதை 18 ஆகக் குறைப்பதன் மூலமும், வேலை தேடுபவர் விகிதங்களை அதிகரிப்பதன் மூலமும் இளைய ஆஸ்திரேலிய மாணவர்கள் நிதி உதவியைப் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் .

**எதிரொலி : மலிவு விலையில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான அல்லாடும் நிலை ஒரு நீண்ட கவலையாக உள்ளது. மருத்துவக் காப்பீட்டை வலுப்படுத்தவும், மனநலச் சேவைகளை மேம்படுத்தவும், அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் சமமான சுகாதாரப் பராமரிப்பு அணுகலை உறுதி செய்யவும் நீங்கள் எவ்வாறு பாடுபடுவீர்கள்?**

பழனியப்பன் : பல் மற்றும் மனநல சேவைகளை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் முழுமையாக ஒருங்கிணைத்து, பொது மருத்துவமனைகளுக்கான ஆதரவை விரிவுபடுத்துவதன் மூலம் உண்மையிலேயே உலகளாவிய சுகாதார அமைப்பை உருவாக்க பசுமைக் கட்சியினர் விரும்புகிறார்கள். இவ்வாறாக நாம் திட்டங்களை செயற்படுத்தும்போது தற்போது பலர் மருத்துவ உதவி பெற பல்லாண்டுகள் காத்திருக்கும் நிலைமை மாறி , துரித நேரத்தில் மக்களுக்கு தேவையான மருத்துவ உதவி கிடைக்கும். குழந்தைகளுக்கு ஆரோக்கியமான இளம்பருவத்தை வழங்க வேண்டும், மேலும் காலநிலை மாற்றத்தின் உடல்நலப் பாதிப்புகளை நிவர்த்தி செய்ய வேண்டும். மேம்பட்ட மாத்திரை சோதனை உள்ளிட்ட மேம்பட்ட தீங்கு குறைப்பு உத்திகளை நாங்கள் ஆதரிக்கிறோம், மேலும் ஒரு தலைமை வாய்வழி மற்றும் பற்சுகாதார அதிகாரியை ஏற்படுத்துவதன் மூலம் பல்வேறு நோய்களிலிருந்து காத்துக்கொள்ள முடியும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ADHD மற்றும் ஆட்டிசம் நோயறிதல்களை நெறிப்படுத்தவும், நாடு முழுவதும் மனநல சேவைகளை வலுப்படுத்தவும் நாங்கள் விரும்புகிறோம். மது போன்ற பிற மருந்துகளைப் போலவே கஞ்சாவும், குற்றவியல் நீதி அமைப்பு மூலம் கையாளப்படுவதற்குப் பதிலாக உரிமம் பெற்று ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். தீங்குகளைக் குறைப்பதற்கும் பொது நன்மையை அதிகரிப்பதற்கும் மருத்துவ-கஞ்சாவை ஒழுங்குபடுத்துவதை பசுமைக் கட்சியினர் விரும்புகின்றனர் . தொழிற்கட்சி மற்றும் தாராளவாதிகள் இருவரும் எங்கள் "இலவச GP கொள்கையை" நகலெடுத்துள்ளதால், பசுமைக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் நீங்கள் மாற்றத்திற்கான பாதையை முன்வைக்க முடியும் என்பதை நாங்கள் அறிவோம்.

**எதிரொலி : நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டால், உங்கள் தொகுதியில் உள்ள எந்த குறிப்பிட்ட உள்ளூர் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிப்பீர்கள். நாடாளுமன்றத்தில் அவற்றுக்காக எவ்வாறு வாதிடத் திட்டமிட்டுள்ளீர்கள்?**

பழனியப்பன் : நீண்ட காலமாக, நான் மேற்கு சிட்னியை என் தாயகமாகக் கருதி என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இங்குள்ள பல்வேறு சமூகங்கள் எவ்வாறு பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளை சமாளித்து வருகின்றன என்பதும் எனக்குத் தெரியும், ஏனென்றால் இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் நானும் அனுபவித்திருக்கிறேன் கட்டுமானர்களின் தவறான அணுகுமுறைகளால் இயக்கப்படும் பின்தங்கிய உட்கட்டமைப்பு, பெருநிறுவன பேராசையால் இயக்கப்படும் விலைவாசி உயர்வினால் ஏற்படும் பணவீக்கம் பெருநிறுவன பில்லியனர்கள் வரி ஏய்ப்பதனால் ஏற்படும் பொது நலநிதிக் குறைப்பு. இது போன்ற சிதைந்த அரசியல் அமைப்பால் ஏற்படும் சமத்துவமின்மையானது துன்பத்தை மேலும் விரிவுபடுத்துகிறது. எனவே கிரீன்வே தொகுதியில் வாழும் குடும்பங்கள் மற்றும் சிறு வணிக நிறுவனங்களுக்கு தேவைப்படும் பாதுகாப்பான மற்றும் வளமான வாழ்க்கைக்கான ஆஸ்திரேலியக் கனவு நழுவி வருகிறது.

முக்கியமான கட்சிகள் வாக்காளர்களை சாதாரணமாக எடுத்துக்கொள்கின்றன. கிரீன்வே அவசர சிகிச்சை மருத்துவமனை கட்டுமானங்கள் ஏன் தேர்தலுக்கு மிக அருகில் நடக்க வேண்டும்? கடந்த மூன்று ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் இல்லாத நிலையில், பாண்ட்ஸ் மொபைல் டவர் மற்றும் டூங்காபி பாலத்திற்கான அறிவிப்புகள் ஏன் இப்போது நடக்க வேண்டும்? இந்தத் தேர்தல் என்பது வாக்காளர்கள் மாற்றத்தை உறுதி செய்வதற்கான ஒரு தலைமுறைக்கு ஒரு முறை கிடைக்கும் வாய்ப்பாகும். கிரீன்ஸுக்கு வாக்களிப்பதன் மூலம் நாம் அதிகார சமநிலையை வைத்திருக்க முடியும். அனைவரின் வாழ்க்கையையும் மேம்படுத்தும் எங்கள் கொள்கைகளை தீவிரமாக செயற்படுத்த சிறுபான்மை தொழிலாளர் அரசாங்கத்தை எங்களால் கட்டாயப்படுத்த முடியும் . ஜூலியா கில்லார்ட் தலைமையில் நடந்த சிறுபான்மை அரசாங்கத்தின் காலத்தில் நாங்கள் சாதனை அளவில் 561 மசோதாக்களை நிறைவேற்றினோம், மேலும் எங்களின் தொடர்ச்சியான அழுத்தத்தினால் குழந்தைகளுக்கான மருத்துவ காப்பீட்டில் பல் மருத்துவத்தை நாங்கள் உறுதிப்படுத்தினோம்.அதன் அடுத்தகட்டமாக பல் மருத்துவத்தை அனைவருக்கும் சேர்க்க வேண்டிய நேரம் இது.

கிரீன்வேயில் எனக்கும் செனட்டில் மெஹ்ரீன் ஃபரூக்கிக்கும் #VOTE1FORGREENS அளிக்க சில காரணங்கள் இங்கே.

1. பெருநிறுவனங்களின் பேராசையை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்.
2. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துக்கு முழுமையாக நிதியளித்தல்.
3. கோடீஸ்வரர்கள் தங்கள் நியாயமானவரியினை செலுத்தச் செய்யுங்கள்
4. வீட்டுவசதியை ஆடம்பரமாக அல்ல, உரிமையாக ஆக்குங்கள்.
5. அவசர காலநிலை நடவடிக்கை பேரழிவுகளைக் குறைத்தல்

இறுதியாக, நமது நாடாளுமன்றம் நமது பன்முக சமூகத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். எனக்கு வாக்களிப்பதன் மூலம், நீங்கள் அதிக பிரதிநிதித்துவ நாடாளுமன்றத்தை உருவாக்க முடியும்.

# அதென்ன படலந்த?

● ஜெரா


மிகவும் மென்மையானவர். கோபப்படாதவர். அதிர்ந்து பேசாதவர். மிகச்சிறந்த இராஜதந்திரி. நரித்தனமிக்கவர். சமாதான விரும்பி. வன்முறையை விரும்பாதவர். பொருளாதார மீட்பர் - எனப் பல அறிமுகங்களுக்குச் சொந்தக்காரரான இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகம் அண்மையில் அம்பலமாகியிருக்கின்றது. அல்ஜசீரா தொலைக்காட்சியின் நேர்காணலுக்கு வலிந்து போய் சிக்கி சின்னாபின்னமாகியிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இந்த நேர்காணலையடுத்து ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக, அவரின் பழைய கோப்புக்கள் எல்லாம் கிளறப்படுகின்றன. தான் எதிரியாகக் கருதுகின்றவர்களைக் கொடூரமாக சித்திரவதை செய்யப்படும் காட்சிகளைக் கண்குளிரப் பார்த்தவாறு, பிராண்டி குடிக்கும் மனநிலையுடையவராக ரணில் இருந்திருக்கிறார் என்கிற செய்திகூட அவரின் பழைய கோப்புக்களில் காணக்கிடைக்கிறது. எனவே இலங்கை வரலாற்றிலேயே மிகவும் மோசமான வக்கிரமுடையவர். வன்முறையாளர். கொடுங்கோலர் எனப் பல அறிமுகங்களையும் ரணில் விக்கிரமசிங்க பெறத்தொடங்கியிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க அல்ஜசீரா நேர்காணலுக்கு தெரிவானது எப்படி?

முதலில் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கான நேர்காணலுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவே அணுகப்பட்டிருக்கிறார். அவர் பின்னடிக்கவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களை சந்தித்து, “எனக்குத் தமிழ் தெரியும். தமிழிலேயே கேளுங்க” என்று புலம்பெயர் தமிழர் ஒருவரை மடக்கிய திமிரிலும், ஜேர்மனியத் தொலைக்காட்சி நேர்காணலின்போது, “எங்களை இரண்டாம் தர மக்களாகக் கருதுகிறீர்களா”? என நேர்காணல் செய்தவரை எதிர்கேள்வி கேட்டு திணறவைத்த நம்பிக்கையிலும், அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு உடன்பட்டிருக்கிறார். என்ன கேள்விகேட்டாலும் தனக்குப் பதில் செல்ல இயலும், பதில் தெரியாவிட்டால் அந்தக் கேள்வியையே திருப்பிவிடும் புலமை தன்னிடம் உண்டு, சிக்கலான கேள்விக்கு ஆம் - இல்லை எனப் பதில்சொல்லி அந்தப் பேச்சினை அப்படியே நிறுத்திவைக்கும் திறன் தன்னிடம் உண்டு என்கிற நம்பிக்கைகள் அவரிடம் மலையளவுக்கு இருந்தன. அத்தோடு, இந்த நேர்காணலின் போது, பார்வையாளர்கள் பக்கமாக ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றக்கூடிய நபர்கள் வருவார்கள் என்பதிலும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த நேர்காணலில் கலந்துகொள்வதன் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் தான் ஒரு அதிமேதாவி என்பதையும், தானே இலங்கைக்குத் தலைமையேற்கத் தகுதியானவன் என்பதையும் நிரூபிக்கலாம் எனக் கருதியிருந்தார். எனவேதான் தலைகீழாகக் குதிக்கத் தயாரானார் இந்த கோட்டாச்சாமி.

### கேள்விகளால் தடுமாறிய ரணில்

மேற்குறித்த விதத்தில் எவ்விதமான தயார்படுத்தலுமின்றியே ரணில் விக்கிரமசிங்க நேர்காணல் மேடைக்கு ஏறினார். ஆனால் நேர்காணல் காண்பதற்காக ரணில் முன்பாக வந்தமர்ந்த மெஹ்தி ஹசன், ரணிலின் மொத்த ஜாதகத்தையும் கரைத்துக்குடித்தவராக இருந்தார். நேர்காணல் செய்வதற்கு முன்பே, ரணில் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது மெஹ்தி ஹசன் தொடர்பிலான குழு. ஜே.வி.பி.யினர்கூட மறந்து, கைவிட்டிருந்த படலந்த சித்திரவதைக்கூடம் குறித்த அறிக்கையோடு நேர்காணல் கூடத்திற்கு பார்வையாளர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர். அங்கே நேர்காணல் செய்த கேள்விகளும் சரி, பார்வையாளர் பக்கமிருந்து கேட்ட கேள்விகளும் சரி “நெத்தியடியாக” இருந்தன. ஆதாரபூர்வமானவையாக இருந்தன. மற்றையது ரணில் விக்கிரமசிங்க தனது வழமையான பதில்சொல்லல் பாணிகளை இங்கே பின்பற்ற முடியாதளவுக்கு அடுத்தத் தடுத்து கேள்விகள் விழுந்தன. எனவே திக்க முக்காடிப் போனார். பதில் சொல்ல முடியாமல் பதறிப்போனார் ரணில் மேற்கொண்ட அனைத்து நரி வேலைகளுக்கும், பொருளாதார மீட்பர், சமாதானத்தில் காவலர் எனப் பட்டம் கொடுத்துக்கொண்டிருந்த உலகம், அவர் புரிந்த குற்றங்களைப் பட்டியலிட்டபோது, திருடனுக்கு தேள் கொட்டிய நிலைக்குள்ளானார். அம்பலமானார்.



### தோண்டியெடுக்கப்பட்ட படலந்த விவகாரம்

உண்மையில் இந்த நேர்காணல், தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு செய்த இனப்படுகொலையைப் பற்றிய பேசுபொருளை கிளப்பியிருக்க வேண்டும். தமிழர்கள் தமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு எதிராக ஏன் சர்வதேச விசாரணையை, நீதியைக் கோருகின்றனர் என்பதன் நியாயத்தைப் பேசியிருக்க வேண்டும். ஆனால் இந்த நேர்காணல் படலந்த சித்திரவதைக் கூடம் பற்றிய மீள்கொணர்வையே ஏற்படுத்தியிருக்கிறது. படலந்த சித்திரவதைக்கூடத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினராக ஜே.வி.பி.யினர் இருப்பதனாலும், தற்போது ஆளுங்கட்சியாக ஜே.வி.பி.யினர் இருப்பதனாலும், அந்த விடயமே இப்போது முழுப்பேசுபொருளாகவும் மாற்றப்பட்டிருக்கிறது.

### எங்கே இருக்கிறது படலந்த?

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் உரக் கூட்டுத்தாபனத்தின் யூரியா உற்பத்தி ஆலைத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்களைத் தங்க வைப்பதற்காக கம்பஹா மாவட்டம், பியகம தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் 20 ஏக்கர் தென்னந்தோட்டத்தில் படலந்த வீட்டுத் திட்டம் நிறுவப்பட்டது. கிரிபத்கொட - பியகம பிரதான வீதிகளின் சந்திப்பிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைக்கப்பட்ட இந்த படலந்த வீட்டுத்திட்டத்தினுள், 64 வீட்டு அலகுகள், ஓர் அலுவலக வளாகம், ஒரு களியாட்ட விடுதி மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டன. யூரியா உற்பத்தி ஆலைத் திட்டம் நிறைவடைந்த பின் படலந்த குடியிருப்பு வளாகம் அப்படியே கைவிடப்பட்டிருந்தது. பின்னர் ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அந்தக் குடியிருப்புத் தொகுதியைத் தனது “தேவைகளுக்காகப்” பயன்படுத்திக்கொண்டார். 1988ஃ1989 காலப்பகுதியிலேயே இந்தக் கட்டடத்தொகுதி அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியதாகச் சொல்லப்படுகின்றது.

### படலந்தவிற்கு கொண்டு வரப்பட்டவர்கள் யார்?

1987ஆம் ஆண்டு தொடக்கம் 1989ஆம் ஆண்டு வரையில் தெற்கில் ரோகண விஜேவீர தலைமையில் ஜே.வி.பி.யின் கிளர்ச்சி ஏற்பட்டது. இடதுசாரிய சிந்தனையுடைய சிங்கள இளைஞர்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றிருந்த சிங்கள அரசை எதிர்த்து ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்த காலப்பகுதியிலேயே படலந்த குடியிருப்பு வளாகம் சித்திரவதை மற்றும் தடுப்பு மையமாக மாற்றப்பட்டது. பரந்த அளவிலும் நன்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளும் கொண்ட தனிமைப்படுத்தப்பட்ட இடமாக இருந்த படலந்த குடியிருப்பு வளாகம் ஜே.வி.பி. உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கு எதிரான இரகசிய நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடமாக அமைந்தது. இங்கு செய்யப்பட்ட அட்டூழியங்களில் சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் ஆகியவை அடங்கும். இங்கு மட்டும் 5000 தொடக்கம் 10,000 வரையிலான ஜே.வி.பி.யினர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. இதில் கிட்டத்தட்ட 690 பெண்கள் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவையனைத்தும் அக்காலப்பகுதியில் அந்தப் பகுதிக்கு பொறுப்பு வகித்த ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்பேரில் இடம்பெற்றதாக சொல்லப்படுகின்றது. ரணிலின் உத்தரவை ஏற்று பொலிஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் உள்ளிட்ட பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள் இந்தச் சித்திரவதைகளைப் புரிந்துள்ளனர்.

### படலந்தவின் நடந்ததென்ன?

படலந்த விவகாரம் குறித்து ஓய்வுபெற்ற பொலிஸ், இராணுவ அதிகாரிகள் சிலர் தற்போது சாட்சியமளிக்க முன்வந்திருக்கிறார்கள். அதேபோல படலந்த தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சிலர் சாட்சியமளித்துள்ளனர். இந்தச் சாட்சியங்கள் படலந்த விடயத்தில் ஏதோ ஒரு அடிப்படையில் தொடர்புபட்டவர்களாக இருக்கின்றனர். அண்மையில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு நேர்காணல் வழங்கியிருந்த படலந்த சித்திரவதைக் கூடத்தின் ஆயுதக் களஞ்சியத்தின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட கருணாரத்ன என்பவர் , அங்கு என்ன நடந்தது என்பதை விவரித்திருக்கிறார். “..படலந்தவிற்கு ஒருவரை கொண்டுவந்தால் முதலில் அவரைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுவார்கள். அதன்பிறகு அவர்களின் இரு காதுகளிற்கு பெரிய இரும்பு ஆணி அடிக்கப்படும். கண்களிற்கு தையல் ஊசியால் குத்துவார்கள். கண்ணாடித் துண்டுகளை சாப்பிடக் கொடுப்பார்கள். சாப்பிடாவிட்டால் பலமாக அடித்து சாப்பிட வைப்பார்கள். சாப்பிடும் போதே அந்த கண்ணாடி துண்டுகள் உடல் பாகங்களை கிழித்துக் கொண்டு கீழே செல்லும். சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பியினால் அவர்களின் முதுகில் சூடு வைப்பார்கள். இவற்றைச் செய்யும்போதே அந்த மனிதரின் அரைவாசி உயிர் போய்விடும். பின்னர் கீழே இறக்கி பொலித்தீன் உறைகளில் போடுவார்கள். அதற்குப் பிறகு விசாலமாக வெட்டப்பட்டுள்ள குழிகளில் அவர்களை இட்டு, அவர்களுக்கு மேல் ரயர்களைப்போட்டு எரியூட்டுவார்கள். படலந்தவின் கொல்லப்படும் நபர்களை எரிக்க இடம் போதாவிடின், மட்டக்குளியில் உள்ள குப்பை சேகரிக்கும் இடத்திற்கு கொண்டு சென்று, அங்கே ரொட்டி போடும் தட்டு போல் ஒரு பெரிய தட்டு இருந்தது. அதில் போட்டு எரிப்பார்கள்.

### இவையெல்லாம் எப்படி வெளிவந்தன?

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க வெற்றிபெற்றார். அந்நேரத்தில் பரப்புரை மேடைகளில் சந்திரிகா அம்மையார் தெற்கிற்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று, ஜே.வி.பி.யினர் மீது கடந்த கால அரசு கட்டவிழ்த்த வன்முறைகளுக்கு விசாரணை மேற்கொள்ளப்படும் என்பது. இதனால் அப்போது அரசியல் கட்சியாகப் பரிணமித்திருந்த ஜே.வி.பி .சந்திரிகாவுக்குத் தனது ஆதரவினை வழங்கியிருந்தது. சந்திரிகா அம்மையார் வெற்றிபெற்றதும், மேம்போக்காக சில குற்றச்செயல்களை விசாரிக்கத் தொடங்கினார். ஆனாலும் தெற்கில் அந்நேரம் பிரபலமாக இயங்கிய “ராவய” பத்திரிகை குழாமினர் இதனை விடவில்லை. படலந்த விடயத்தில் விடாப்பிடியாக இருந்தனர். யாரும் உள்நுழைய முடியாமல் தடைசெய்யப்பட்டிருந்த பகுதியாக இருந்த படலந்தவிற்கு, ஜனாதிபதி ஊடகப் பிரிவினர் எனத் தெரிவித்து, உள்ளே நுழைந்து ஆதாரங்களைத் திரட்டினர். அதனை ஊடகங்களில் வெளிப்படுத்தினர். எனவே சந்திரிகா அம்மையார் தவிர்க்கமுடியாதபடி, படலந்த விடயத்தில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்தார். அந்த ஆணைக்குழு சில காலம் தொழிற்பட்டதோடு, ஆதாரங்களையும் திரட்டி ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையானது, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுமில்லை. விவாதிக்கப்படவுமில்லை. நீதிமன்ற நடவடிக்கைக்குட்படவுமில்லை. இதுவரைகாலமும் வெறும் அறிக்கையாக மட்டுமே இருந்தது. அல்ஜசீரா தொலைக்காட்சி அந்த அறிக்கையை மீளக்கிளறச் செய்துள்ளது. பேசுபொருளாக்கியிருக்கிறது. ரணில் மீதான மொத்த அடையாளங்களையும் கிழித்தெறிந்துள்ளது.



# கங்காரு தேசத்தின் தலைவிதி 'மே'யில் நிர்ணயம்!

● ஆர்.சுகந்தன்

ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சி நாடாளுமன்றத் தேர்தலுக்குரிய காலம் நெருங்கிவிட்டால் அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. தேர்தல் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெளி வராதபோதிலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு பிரதான கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் தயாராகிவிட்டன. பசுபிக் பிராந்தியத்தில் தலைமைத்துவ நாடாகக் கருதப்படும் ஆஸ்திரேலியாவின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய கூட்டாட்சித் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி நடத்துவதற்கு பிரதமர் அந்தோனி அல்பானீஸி திட்டமிட்டிருந்தார். மார்ச் 8 ஆம் திகதி நடைபெற்ற மேற்கு ஆஸ்திரேலிய மாநில தேர்தலில் லேபர் கட்சி வெற்றிபெற்றதும், மார்ச் 9 ஆம் திகதி தேர்தலுக்குரிய அழைப்பை அவர் விடுக்கவிருந்தார். எனினும், அல்பிரட் வெப்பமண்டல சூறாவளியானது தென்குயின்ஸ்லாந்து மற்றும் வடக்கு நியூ சவூத் வேல்ஸ் மாநிலங்களில் பேரனர்த்தத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் கூட்டாட்சித் தேர்தலை அறிவிக்கும் திட்டத்தை பிரதமர் கைவிட்டார்.

ஏப்ரல் 12 ஆம் திகதி தேர்தலை நடத்துவதாக இருந்தால் பாதீட்டை முன்வைக்காமல் நேரடியாக தேர்தலுக்கு செல்வதற்கு ஆளுந்தரப்பு திட்டமிட்டிருந்தது. எனினும், அந்த முயற்சி வெற்றியளிக்காததால் பாதீட்டை முன்வைக்க வேண்டிய நிலை உள்ளது. எது எப்படி இருந்தாலும் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. புயலுக்கு மத்தியில் தேர்தல் அறிவிப்பை விடுத்திருந்தால் மக்களைவிடவும், லேபர் கட்சிக்கு தேர்தல்தான் முக்கியம் என லிபரல் கூட்டணி விமர்சனக் கணைகளைத் தொடுத்திருக்கக்கூடும். அது லேபர் கட்சிக்குரிய வாக்கு வங்கியிலும் தாக்கம் செலுத்தி இருக்கும். அதனால்தான் பிரதமர் தந்திரோபாயப் பின்வாங்கலை இது விடயத்தில் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## 2022 கூட்டாட்சித் தேர்தல்

கொரோனாப் பெருந்தொற்றுக் காலப்பகுதியிலேயே, அதாவது 2022 இலலேயே கடைசியாக ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவைத் தொடர்ந்து ஆட்சி செய்துவந்த லிபரல் கூட்டணி ஆட்சிக்கு அந்தத் தேர்தல் முற்றுப்புள்ளி வைத்தது. குறித்த தேர்தலில் லேபர் கட்சி வெற்றிவாகை சூடியது. ஆஸ்திரேலிய நாடாளு மன்றத்தில் 151 ஆசனங்கள் உள்ளன. ஆட்சி அமைக்க வேண்டுமெனில் 76 ஆசனங்களை வெல்ல வேண்டும். அந்தவகையில் லேபர் கட்சி 77 ஆசனங்களை வென்று அரியணையேறியது. பிரதமராக அந்தோனி அல்பானீஸி தெரிவுசெய்யப்பட்டார். இந்தத்தேர்தலில் லிபரல் கூட்டணிக்கு 58 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. 1983 ஆம் ஆண்டுக்கு பிறகு லிபரல் அணி பெற்ற மோசமான தேர்தல் தோல்வியாக அது அமைந்தது. கிறீன்ஸ் கட்சிக்கு 4 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. ஏனைய இடங்களை சுயாதீன உறுப்பினர்கள் வென்றனர்.

## லேபர் கட்சிக்கான சவால்கள்

கொறொனா பெருந்தொற்றால் உலக பொருளாதாரமே ஆட்டம் கண்டது. உள்நாட்டு உற்பத்தி பாதிப்பு, வர்த்தக முடக்கம் என ஆயிரம் பிரச்சினைகள் அணிவகுத்து நின்ற சூழ்நிலையிலேயே லேபர் கட்சி ஆட்சிக்கு வந்தது. இதனால் ஆரம்பம் முதலே சவால்மிக்க அரசியல் பயணத்தை முன்னெடுக்க வேண்டியேற்பட்டது. கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும் பயணத்தை தொடர்ந்தாலும் உக்ரைன்- ரஷ்யப் போர் அடுத்த அடியாக அமைந்தது. இந்தப்போரும் ஆஸ்திரேலியப் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தியது. அதேபோல ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான போரும் ஆஸ்திரேலியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தற்போதுவரை அதன் தாக்கம் எதிரொலித்துக்கொண்டுதான் உள்ளது. பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஆஸ்திரேலியாவில் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடந்தன. யூத எதிர்ப்புப் போக்கும் தலைதூக்கியது. இதனால் ஆஸ்திரேலிய தேசியப் பாதுகாப்பு தொடர்பிலும் அச்சுறுத்தல் நிலை உருவாகியது. இஸ்ரேலுடனான உறவிலும் விரிசல் நிலை ஏற்பட்டது. மறுபுறத்தில் லேபர் கட்சி செனட்டர் பாத்திமா பேமன், லேபர் கட்சியில் இருந்து வெளியேறி புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார். கூட்டாட்சித் தேர்தலில் சில தொகுதிகளில் அவரது கட்சி போட்டியிடவுள்ளது. பாலஸ்தீன விவகாரம் தொடர்பான லேபர் அரசின் அணுகுமுறையால் முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கி சரிந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. அதேபோல யூத எதிர்ப்புப் போக்கை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஆஸ்திரேலிய வாழ் யூத சமூகமும் லேபர் ஆட்சிமீது கடும் அதிருப்தியில் உள்ளது. லேபர் ஆட்சியின்கீழ் நடத்தப்பட்ட குரல் வாக்கெடுப்பும் தோல்வியில் முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வீட்டு வாடகை பிரச்சினை, வேலையின்மை அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களும் லேபர் அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும். லிபரல் கூட்டணி ஆட்சியின்கீழ் சீனாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவில் கடும் விரிசல் ஏற்பட்டது. கொரோனாவின் தோற்றம் தொடர்பில் எழுந்த சர்ச்சையால் ஆஸ்திரேலிய பொருள்களுக்கு சீனா கூடுதல் வரிகளை விதித்தது. இதனால் வைன், மாட்டிறைச்சி, சிங்கி இறால், பார்லி என ஆஸ்திரேலிய ஏற்றுமதிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின. சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்தி வரி நீக்கங்களை லேபர் ஆட்சி செய்துகொண்டது. சீனப் பிரதமர் கன்பராவுக்கும், ஆஸ்திரேலிய பிரதமர் பீஜிங்குக்குகூட சென்றிருந்தனர். லேபர் ஆட்சியில் நடந்த முக்கியமான வெற்றியாக இது கருதப்படுகின்றது.

## கருத்து கணிப்பு கூறுவது என்ன?

கூட்டாட்சித் தேர்தலில் பிரதான இரு கட்சிகளாலும் ஆட்சியமைப்பதற்குரிய தனி பெரும்பான்மையை பெறமுடியாமல்போகும் என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. அல்பானீஸி மற்றும் பீட்டர் டட்டன் ஆகியோர் தொடர்பில் நடத்தப்பட்டுள்ள மதிப்பீட்டில் இருவரும் சமநிலையில் இருப்பது புலனாகின்றது. இரு கட்சிகளுக்குரிய முதன்மை வாக்கு வங்கியிலும் பெரியளவு வித்தியாசம் இல்லை. எனவே, வெற்றியை தேர்தல் பிரசாரமும், கொள்கைகளும் உறுதிமொழிகளுமே நிர்ணயிக்கும் எனக் கூறப்படுகின்றது.

## மூத்த அரசியல்வாதிகள் ஓய்வு

முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன் உட்பட கூட்டாட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு மேல் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை என அறிவித்துள்ளனர். இதனால் புது முகங்களுக்கு நாடாளுமன்றம் வரக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இரு பிரதான கட்சிகளிலும் இலங்கை மற்றும் இந்திய வம்சாவளியினர் இம்முறையும் போட்டியிடவுள்ளனர். கிறீன்ஸ் கட்சி சார்பிலும் சிலர் களமிறங்கக்கூடும்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI


# மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் – சிட்னி ஏற்பாட்டில்
# சிலப்பதிகாரம் மேடையேற்றப்பட்டது





















மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்- சிட்னி ஏற்பாட்டில் சிலப்பதிகாரம் மேடையேற்றப்பட்டது. மாவை நித்தியானந்தனின் தயாரிப்பில் பகீரதி பார்த்திபனின் நெறியாள்கையில் பாரதி பள்ளி மாணவர்களின் நடிப்பில் சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் சிட்னியில் மண்டபம் நிறைந்த காட்சிகளாக ஒரே நாளில் இரு காட்சிகளாக அரங்கேறியது. அவற்றிலிருந்து சில நிழற்படங்கள்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198



# ரணிலின் சுயரூபத்தை வெளிக்காட்டிய அல்ஜசீரா:

# போர்க்குற்ற விசாரணை மறுதலிப்பா? ஒப்புதலா?

● நவீனன்

சிங்களவர்களால் அதிபுத்திசாலியாகக் கருதப்படும் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அல் ஜசீரா தொலைக்காட்சியின் 'ஹெட் டு ஹெட்' (Head To Head) நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் மெஹ்தி ஹசனுக்கு வழங்கிய நேர்காணலில், ஈழத்தமிழர்கள் மீதான இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை இராணுவம் தடுத்து நிறுத்தியதை தன் வாயாலேயே ஒப்புக் கொண்டுள்ளார்.

நுணலும் தன் வாயால் கெடும் எனும் பழமொழிக்கு ஒப்பாக, ரணிலும் தன் வாயால் பல விடயங்களை ஒப்புக் கொண்டு விட்டார். அல்லது ஒப்பாரி வைத்து விட்டார் என்றும் கருதலாம்.

எப்படித்தான் தன் சிங்கள இனத்தை போர்க்குற்றத்தில் இருந்து காப்பாற்ற அவர் முயற்சித்து இருந்தாலும், அவரின் நேர்காணல் சிங்கள தேசத்தின் உண்மை முகத்தை உலகிற்கு தோலுரித்துக் காட்டி விட்டது என்பதை மறுக்க முடியாது.

### போரில் உதவியைத் தடுத்த இராணுவம்:

ரணில் விக்கிரமசிங்க தன்னை அமைதியின் அரசியல்வாதி, ஜனநாயகம் மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தும் தலைவர் என்று பல சுயமுத்திரைகளை குத்திக் கொள்பவர். அத்துடன் இலங்கை ஒரு வன்முறையற்ற நாடு என்றும், முன்னேற்றம் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளைக் கவனமாக தான் வடிவமைத்துள்ளார் என்றும் அவர் உலகிற்கு கூறி வருபவர்.

இருப்பினும், ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, அவரது வார்த்தைகள் யதார்த்தத்தின் கொடூரமான கேலிக்கூத்தாகும். இறுதிப் போரில் மட்டும் 165,000க்கும் மேற்பட்டோர் ஒரு பெரும் இனப்படுகொலையில் கொல்லப்பட்டனர். அதை ரணில் வெறும் சம்பவமாக குறை மதிப்பிட்டே கூறி வருகிறார்.

உண்மையிலே ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு இதுதான், போர்க்குற்றங்களை வெள்ளையடித்தல், இனப்படுகொலை எனும் சொற்பதத்தையே அகராதியில் இருந்து நீக்குதல், மற்றும் இன அழிப்பு செய்த அரசைப் பாதுகாத்தல்.

ஆனால் அவர் தலைமை தாங்கிய சிங்கள அரசோ 77 ஆண்டுகளாக தமிழர்களை ஒடுக்கிய பௌத்த இனவாத வன்முறையின் கட்டமைப்புகளால் உருவமைக்கப்பட்டுள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஈழத்தில் இறுதிப்போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை இலங்கை அரச படைகள் தடுத்தன என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மேலும் மெஹ்தி ஹசனுக்கு வழங்கிய நேர்காணலில், பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வழக்குத் தொடுப்பிலிருந்து பாதுகாக்கவில்லை என்றும் மறுத்துள்ளார்.

### போர்க்குற்ற விசாரணை மறுதலிப்பு :

இந்த நேர்காணலில் கூறியது போல இலங்கை வன்முறையற்ற நாடு என்ற விக்கிரமசிங்கவின் கூற்று அப்பட்டமான அவமானமாகும். இலங்கை அரசு ஒருபோதும் வன்முறையற்றதாக இருந்ததில்லை என்பது வரலாற்றில் தெளிவாகிறது.

1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் அரசால் நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் முதல் 2009 இல் முள்ளிவாய்க்கால் படுகொலையில் உச்சக்கட்டத்தை அடைந்த இனப்படுகொலைப் போர் வரை தமிழ் மக்களை திட்டமிட்டு அழிப்பதன் அடிப்படையில் சிங்கள அரசும், அதன் இராணுவமும் கட்டமைக்கப்பட்டது.

இன்றும் கூட, தமிழ் நிலம் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு தொடர்ந்தும் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள் மௌனமாக்கப்படுகிறார்கள். அத்துடன் போரில் காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் தமிழ்க் குடும்பங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

2019 ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய கொடிய ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் அரசாங்கத்துக்கு தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவதை நம்பகத்தன்மையுடன் விசாரிக்க தனது சொந்த நிர்வாகம் தவறிவிட்டது என்ற புதுப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் ரணில் மறுத்தார்.

2009 ஜனவரிக்கும் மே மாதத்துக்கும் இடையில், 165,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். பொதுமக்கள் "போர் இல்லாத பிரதேசம்" (No Fire Zone) என்று அழைக்கப்படுவதற்குள் கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர்.

### தமிழ் இனப்படுகொலை மறுதலிப்பு ?

நீண்ட காலப் போரில் தமிழர் தாயகம் இலங்கை இராணுவத்தால் இடைவிடாமல் குண்டுவீசித் தாக்கப்பட்டது. பொது மருத்துவமனைகள் மீது ஷெல்கள் வீசப்பட்டன. பல்லாயிரம் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். சரணடைந்த தமிழர்கள் அரச படைகளால் கொல்லப்பட்டனர்.

பச்சிளங் குழந்தைகள் தங்கள் தாய்மார்களின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டு காணாமல் போனார்கள். இது ஒரு இனப்படுகொலை இல்லை என்று இப்போது அதி மேதாவி ரணில் வாதிடுகிறார்.

தமிழ் இனப்படுகொலையை மறுக்கும், திரித்துக்கூறும், நிராகரிக்கும் இலங்கையின் பரந்த முயற்சி இப்போதும் தொய்வின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்கும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும், தற்போதைய அடக்குமுறை நிலையைப் பேணுவதற்குமான ஒரு திட்டமிட்ட நடவடிக்கை என்றே கருதலாம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் கையாண்ட விதம் மற்றும் 1980 களின் பிற்பகுதியில் ரணிலிம் கண்காணிப்பின் கீழ் பட்டலவந்த வதைமுகாமில் செய்யப்பட்ட சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சூடான விவாதம் இந்த நேர்காணலில் இடம்பெற்றது.

2009 இல் முடிவடைந்த மோதலில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி வழங்கப்பட்டதா ?என்று ரணிலிடம் ஹசன் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ரணில் , இல்லை. எந்த சமூகத்திற்கும் நீதி இதுவரை வழங்கப்படவில்லை என்று மிக அப்பட்டமாகவே கூறியுள்ளார். அத்துடன் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் தடுக்கப்பட்டதையும், சில மருத்துவமனைகள் குண்டுத் தாக்குதல்களில் தாக்கப்பட்டதையும் அவர் ஒப்புக் கொண்டார்.

ஆனால் அத்தகைய குண்டுவெடிப்புகள் முறையாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை என்பதை மறுத்தார்.

### போர்க்குற்ற ஒப்புதல் ?

ஐ.நா. சபையின் கூற்றுப்படி, இலங்கை அரசாங்கப் படைகள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதைத் தடுத்தன என்று நேர்காணலில் ஹசன் கூறினார். அது தொடர்பில் பதிலளித்த போரின் இறுதிக் கட்டத்தின் போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்ரமசிங்க, அது நடந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றார்.

அதேசமயம் அமெரிக்க வெளிவிவகாரத் துறை போர்க் குற்றங்கள் செய்ததாக குற்றம் சாட்டும் ஜெனரல் சவேந்திர சில்வாவை, மீண்டும் இலங்கையின் ஆயுதப் படைகளுக்குத் தலைவராக நியமித்ததற்கான காரணம் குறித்தும் ரணில் விக்ரமசிங்க இதன்போது நேர்காணலில் வெளிப்படையாக தெளிவுபடுத்தினார்.

ஈழ மண்ணில் 2009 க்குப் பிறகும், இராணுவ ஆக்கிரமிப்பு, நில அபகரிப்புகள், காணாமல் போதல்கள் என்ற வடிவங்களில் இனப்படுகொலை இன்னமும் தொடர்கிறது.

இலங்கையில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது. சர்வதேச சமூகம் இலங்கையின் குற்றங்களை வெள்ளையடிப்பதை நிறுத்தி உண்மையை அங்கீகரிக்க வேண்டும். இலங்கை ஒரு இனப்படுகொலை நாடு, மேலும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் அதன் தொடர்ச்சியில் உடந்தையாக உள்ளனர் என்பதை அவர் தன்வாயால் அருள்தருளிய செவ்வியிலேயே தெளிவாக தெரிவித்து விட்டார்.

இனி! உலகம் ஈழத் தமிழர்களுக்கு என்ன பதிலை, என்ன வியாக்கியானத்தை சொல்லப் போகின்றது?

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# மீரா பதிப்பக டேவிட் லிகோரி: ஈழப் போர்க்கால பதிப்புத்துறையின் முன்னோடி!



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ஈழத்தில் போர்க்கால நூல்வெளியீட்டுத் துறையின் முன்னோடியாக விளங்கிய மீரா பதிப்பக டேவிட் லிகோரி கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதியில் யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினார். அவரின் பதிப்புத் திறன் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

போர்க் காலங்களில் யாழ்ப்பாணத்தில் பெரியளவில் காகிதாதித் தட்டுப்பாடு இருந்தது. ஆனாலும் பல தடைகளைத் தாண்டி தாயகத்தின் பல்வேறு எழுத்தாளர்களை முன்னேற்றும் பொருட்டு, அவர்கள் படைப்புக்களை நூல்களாக வெளியிட்ட பெருமை மீரா பதிப்பகத்தின் மறைந்த (13/1/2025) டேவிட் லிகோரிக்கே உள்ளது.

பதிப்பித்துறையில் உள்ள பல்வேறு கடினமான விடயங்களையும் கடந்து மீரா பதிப்பகத்தின் டேவிட் லிகோரி செய்த பணியானது மிக அளப்பரியது. ஈழப் போராட்டத்தில் இரண்டு இராணுவங்களின் கொடூரமான காலகட்டத்தில், அவரை 1989 நடுப்பகுதியில் பதிப்பகப் பணி காரணமாக முதன் முதலில் சந்தித்த ஞாபகங்கள் உண்டு.

போர்க்கால இலக்கியங்கள் பலவற்றை வெளியிட்டுப் பெரும்பங்காற்றிய டேவிட் லிகோரி அவர்கள் ஆரம்பத்தில் சினிமாப் பாடல் புத்தகங்களை வெளியிட்டு வந்தார். அதன் பின்னர் 1988 முதல் 1994 வரை 28 நூல்களை, தனது மீரா வெளியீட்டு நிறுவனம் மூலம் வெளியிட்ட பதிப்பாளர் என்ற பெருமைக்குரியவர்.

அன்றைய போர்க்காலச் சூழலில், அரசியல் அழுத்தங்கள்-இராணுவ அச்சுறுத்தல்கள் மத்தியிலும் அவரை பல்வேறு அச்சகங்களில் காணக்கூடியதாக இருந்தது. பல நூல் வெளியீட்டு விழாக்களிலும் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அத்துடன் பல புதிய படைப்புக்களை அவர் வெளியிட்டு வந்தார்.

பின்னர் போர்க்காலம் உச்சமான போதிலும், 1990 இன் பின்னர் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்கள் இடப்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதும் தொடர்ந்து தனது செம்மையான நூல் வெளியீட்டுப் பணியை மீரா பதிப்பகத்தின் டேவிட் லிகோரி செய்து வந்தார். இவரது பணியானது காலங்கடந்தும் போற்றத்தக்கது.

மீரா பதிப்பகத்தின் டேவிட் லிகோரி பற்றிய இன்னொரு விடயத்தை நாங்கள் முக்கியமாகக் கருத வேண்டும். ஏனெனில் பதிப்பகம் என்பது நூல்களை வெளியிடும் போது பல்வேறு இடைஞ்சல்களையும் இன்னல்களையும் சந்திக்கும்.

அத்தகைய இடைஞ்சல்கள், விநியோகத் தடங்கல்கள் என்பவற்றையெல்லாம் தன் மேனி மேல் சுமந்து புத்தகங்களை தொடர்ந்து வெளியிட்ட பெருமை மீரா பதிப்பகத்தின் டேவிட் லிகோரி அவர்களுக்கு உரித்தாகும்.

தானே தன் கையால் சுமந்து சென்று நூல்களை விற்கும் பணியானது ஒரு வரலாற்றுக் கடமையாகவே நாங்கள் கருத வேண்டும். அவரது வெளியீடுகள் பல்வேறு நாடுகளைச் சென்றடைந்ததும் ஒரு வரலாற்றுச் சாதனையாகவே கருதப்பட வேண்டும்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவருடைய பங்களிப்பை நாங்கள் ஒருபோதும் மறக்கவே முடியாது.

1995 பெரும்இடப்பெயர்வின் பின்னர் வன்னியில் இருந்த போது அவர் மிகப்பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி இருந்தார். ஆனாலும் அவரது வாழ்க்கை முழுவதும் நூல்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்தது.

ஈழத்துப் பதிப்புத் துறையில் மீரா பதிப்பகம் ஆளுமைமிக்க பங்களிப்பை வழங்கி உள்ளது.

பொருளாதாரத் தடையினால் அச்சுத்தாள்கள், அச்சுமை, வார்ப்புரு எழுத்துகள் தட்டுப்பாடாகவும், அதிக விலையிலும் விற்ற காலத்தில் அப்பியாசப் புத்தக கோட்டுத் தாள்களில் அச்சிட்டு, மர புளொக் அட்டையுடன் மீரா வெளியீடுகள் பல வெளிவந்தன.

தனது பதிப்பக புத்தகங்களை அச்சிட்டு கடை கடையாக விநியோகம் செய்ததும் அவரே. செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம், தாமரைச்செல்வி, கே.எஸ். ஆனந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், இயல்வாணன், பொன். கணேசமூர்த்தி, வளவை வளவன், ஓ.கே.குணநாதன், வாமதேவன், முருகு, இந்திரா பிரியதர்சினி ஆகியோரின் நாவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தில் போர்க்கால வாழ்வியல் அனுபவங்களை வெளிக்கொணர்ந்த முக்கியமான இலக்கியப் பங்களிப்பாளராக இவரை அடையாளம் காணலாம். புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்து நாவல் வெளியீட்டினைச் செய்தும் வந்தார்.

ஈழப் போர்க்கால பதிப்புத்துறையின் முன்னோடியான டேவிட் லிகோரி பொருளாதாரப் பலமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் அவர் சமூக அக்கறையுடன் செய்த சேவை மகத்தானது. அவரது வெளியீடுகள் இன்னமும் நிலைத்து நிற்கின்றன.

மீரா பதிப்பகத்தால் 1988இல் மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் ஆகிய நூல்களும், 1989இல் மண்ணின் தாகம், பாலைவனப் பயணிகள், கானகத்தின் கானம், முற்றத்து ஒற்றைப்பனை, சங்கரன் ஆகிய படைப்புக்களும், 1990இல் பூஜைக்காக வாழும் பூவை, இராவணன் கோட்டை, நிலவே நீ மயங்காதே, இருள் இரவில் அல்ல போன்ற நூல்களும், 1991இல் அக்கினி, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை, முள்முடி மன்னர்கள், விடியலைத் தேடி, ஊருக்கல்ல ஆகிய படைப்புக்களும், 1992இல் ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, சுவடுகள் ஆகிய படைப்புக்களும், 1993 இல் தாகம் என்ற நூலும் 1994 இல் ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை, கனவுகள் சுமக்கும் தேசம் ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவருடைய பங்களிப்பை நாங்கள் ஒருபோதும் மறக்கவே முடியாது. ஈழப் போர்க்காலப் பதிப்புத்துறையின் முன்னோடியான டேவிட் லிகோரிக்கு தோழமையான அஞ்சலிகள் உரித்தாகுக!


FSA/DETS2011



Best Start
Best Life



இலவசக் கின்டர்: உங்கள் குழந்தையை 2025 ஆம் ஆண்டிற்காப் பதிவு செய்யுங்கள்

விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவசக் கின்டர் கிடைக்கிறது. இதனால் ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றிற்கு $2,563 வரை குடும்பங்களால் சேமிக்க முடியும்.

இரண்டு ஆண்டுகளுக்கான கின்டர் உங்கள் பிள்ளை அவர்களின் முக்கிய திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும், எனவே அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.


இலவசக் கின்டர் அனைவருக்குமானது . உங்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்றவை) தேவையில்லை.

மேலும் தகவல்களை அறிய இங்கு பார்வையிடுங்கள் vic.gov.au/kinder/tamil

THE EDUCATION STATE
VICTORIA State Government | Department of Education
KINDERGARTEN Victorian Government Approved

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ் தேசியக் கட்சிகள் எதிர்கொண்டிருக்கும் சவால்கள்





● ரமேஸ்

இலங்கையில் உள்ள 347 உள்ளூராட்சி, நகராட்சி, மாநகராட்சி சபைகளுக்கான தேர்தல் நெருங்கி வருகின்றது. 2023ஆம் ஆண்டில் இடம் பெற்றிருக்க வேண்டிய இந்தத் தேர்தலானது, அதிக காலம் தாழ்த்தியே இடம்பெறவுள்ளது. பொருளாதார வீழ்ச்சியைக் காரணம் காட்டி இதுவரைகாலமும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தள்ளிவைக்கப்பட்டிருந்தது. தற்போதைய அறிவிப்பின்படி எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, தேர்தலில் போட்டியிடுவதற்காக அனைத்து கட்சிகளும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. ஆனால் தேர்தல் இடம்பெறவில்லை. அதற்குள் கட்சிகள் சார்பில் வேட்பாளர்களாகக் களமிறங்கியவர்களில் பலர் புலம்பெயர்ந்திருந்தனர். அரசியலிலிருந்து ஒதுங்கினர். இறந்துபோயினர். எனவே எனவே உள்ளூராட்சி சபைகளும் தெற்கிடம் பறிபோக வாய்ப்புள்ள இந்தத் தருணத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கட்டாயம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உண்டு. ஆனால் தமிழரசுக் கட்சியோ, தனக்குள் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

2023ஆம் ஆண்டு ஏற்பாடாகியிருந்த உள்ளூராட்சி சபை தேர்தலின்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியானது அப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்திருக்க கட்சிகளை வலிந்து வெளியேற்றியது. ஏனைய கட்சிகள் வெளியேறிப்போய் தனியே தேர்தலில் போட்டியிடுவதற்கு சாதக நிலமைகள் இல்லாதிருந்தபோதிலும்கூட அந்தக் கட்சிகள் வலிந்து வெளியேற்றப்பட்டன. இப்போது தாம் வலிந்து வெளியேற்றிய தரப்பினரை, மீள வந்து சேருமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியே அழைப்புக்குமேல் அழைப்பு விடுத்துக்கொண்டிருக்கின்றது. அந்நேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கட்சிகள், இப்போது இன்னொரு கூட்டணியை ஆரம்பித்து விட்டன. கடந்த ஜனாதிபதி தேர்தலிலிருந்து சங்குச் சின்னத்தை முன்னிறுத்தி அந்தக் கூட்டணி போட்டியிட்டு வருகின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி என்கிற பெயரிலேயே எதிர்கொள்ள அவை தயாராகிவருகின்றன. இந்நிலையில் வேறு வழியே இல்லாமல் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துக் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இப்படித் தமிழரசுக் கட்சியானது தனித்துக் களமிறங்கினாலும்கூட, வேட்பாளர் தெரிவில் அதிக சிக்கல்களை அக்கட்சி எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மீது விமர்சனங்கள் அதிகரித்திருக்கின்ற இன்றைய நிலையில், அதில் இணைந்து உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்ள இளையவர்கள் முன்வருகிறார்கள் இல்லை என கட்சியின் முக்கியஸ்தர்களே புலம்பும் அளவிற்குத்தான் நிலைமை இருக்கின்றது. எனவே கட்சியில் இருக்கின்ற, முதியவர்களையே களத்தில் இறக்க இலங்கை தமிழரசுக் கட்சி தயாராகிவருகின்றது. அடுத்து பெண்களின் பிரதிநிதித்துவம். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து போட்டியிட பெண்களைத் தேடிப்பிடிப்பதே சிரமமானதாக மாறியுள்ளது.

இதனைத் தாண்டி வெளியில் நிற்பது தமிழ் தேசிய மக்கள் முன்னணி. தமிழரசுக் கட்சிக்கு இருக்கின்ற அதே சிக்கல்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் உண்டு. வேட்பாளர்களை தேடிப்பிடிப்பதில் பல்வேறு தடைகள் உள்ளன. இளைஞர்கள், பெண்கள் இணைவதில் பின்னிற்கிறார்கள். இம்முறை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிற அனுர - அர்ச்சுனா அலைகள் தம்மைத் தோற்கடித்துவிடும் என அஞ்சுகின்றனர். எனவே தோற்கப்போகின்ற தேர்தலில் போட்டியிடுவதைவிட, தவிர்த்துக்கொள்வது நல்லதெனக் கருதுகின்றனர்.

இவையெல்லாவற்றையும் விட இன்னொரு விடயமும் இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் பங்கெடுப்பதில் தாக்கம் செலுத்துகின்றன. சமூகவலைதளங்களில் தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாட்டாளர்கள் மீது எழுதப்படும் அவதூறுகள் இந்நாட்டின் ஜனநாயகவெளி குறித்த அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளன. அதுவும் அரசியலுக்கு வரக் காத்திருப்போர் மீது எழுதப்படும் இத்தகைய அவதூறுகள் அவர்களை அரசியல் அரங்கிலிருந்தே ஒதுங்கியிருக்கச்செய்துள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும் ஆதரவாக செயற்படும் இந்த சமூக வலைதளப் போலிக்கணக்குகளின் செயற்பாடுகள் அதிகரித்துச்செல்கின்றன. தாம் இலக்குவைக்கும் நபரை மட்டுமல்லாது, குழந்தைகள், பெண்கள் என அனைவரது நிழற்படங்களையும் சமூக வலைதளங்களில் பகிர்ந்து அவதூறு பரப்பும் வேலையைச் செய்கின்றன. இதுகுறித்து பல்வேறு தரப்பினரும், கணனிசார் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் முறைப்பாடளித்தும், இந்தப் போலிக் கணக்குகள் வெளிநாடுகளிலிருந்து இயக்கப்படுவதால் தம்மால் எதுவும் செய்யமுடியாதெனக் கைவிரித்துவிட்டனர். இலங்கையில் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளபோதிலும்கூட இது மாதிரியான இணையக் குற்றங்களை கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றதெனில், இதற்குப் பின்னால் பலமான தரப்பினரின் செல்வாக்கு இருக்குமென்பது உறுதியாகின்றது. இது ஒரு விதத்தில் தேர்தல் சட்டங்களை மீறும் செயல். தேர்தல் வன்முறைகளை ஊக்குவிக்கும் செயல். ஆனால் சமூக வலைதளங்களின் ஊடாக சேறடிப்பு வேலைகளைச் செய்து ஆட்சியைப் பிடித்த இந்த அரசு அது குறித்தெல்லாம் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது சேறு பூசி அவற்றைக் களத்திலிருந்து அகற்றிவிட்டு, அந்த இடங்களைத் தாம் கைப்பற்றிக்கொள்ள, இந்த அவதூறு பரப்பும் சமூக வலைதளப் போலிக் கணக்குகளைப் பயன்படுத்திக்கொள்கின்றது எனப் பலரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

கட்சிகள் தம் பிரதான வேட்பாளர்களைத் தவிர்த்து இரண்டாம், மூன்றாம் நிலை வேட்பாளர்களையே தேர்தல் போட்டியில் ஈடுபடுத்தவேண்டியிருக்கிறது. அத்தோடு 2023ஆம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, தேசிய மக்கள் சக்திக்கு இவ்வளவு பெரிய ஆதரவு அலை இருக்கவில்லை. ஆளுங்கட்சியாகவும் இருக்கவில்லை. ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தியே ஆளுங்கட்சியாக மாறியிருக்கிறது. எனவே அந்தக் கட்சியில் இணைந்து போட்டியிட பலரும் ஆர்வத்தோடு இருக்கின்றனர். இந்நிலைகளைக் கவனத்தில்கொண்டே, உள்ளூராட்சிசபை தேர்தல் திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி 2023ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கல் அனைத்தும் செல்லுபடியற்றதாகின.

இதுவரைகாலமும் தெற்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளை ஆளுங்கட்சியே கைப்பற்றி வந்துள்ளது. அல்லது அடுத்த தேர்தலில் ஆளுங்கட்சியாக மாறும் என எதிர்பார்க்கப்படும் கட்சி, உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் நிலையே ஒரு மரபாக நீடித்துவந்திருக்கின்றது. ஆனால் வடக்கின் நிலைமையோ வேறானது. தெற்கில் யார் ஆட்சியைப் பிடித்தாலும், வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ்த் தேசியக் கட்சிகளே உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி வந்தன. சில இடங்களில் தனியாகவும், சில இடங்களில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்தும் உள்ளூராட்சி சபைகளை நிர்வகித்து வந்தன. அதனால்தான், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தமது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து களநிலைவரம் மாற்றமடைந்திருக்கின்றது. தெற்கின் நிகழ்ச்சிநிரலோடு வடக்குவாழ் தமிழர்கள் இசைந்தோட ஆரம்பித்திருக்கின்றனர். ஆகவே இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூாராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மக்கள் மனநிலையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளினுடைய இருப்பே கேள்விக்குறியாகியிருக்கின்ற இந்நிலையிலும், இங்கிருக்கின்ற குறித்த கட்சிகள், தமக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவும், தேர்தலை எதிர்கொள்ளவும் தயாரில்லாத நிலையிலேயே இருக்கின்றன. இப்போதிருக்கின்ற நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அதேபோல தமிழ் தேசியக் கட்சிகள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ள நிதிசார்ந்த பிரச்சினைகளையும் பெரியளவில் எதிர்கொள்கின்றன. வழமையாக இதுமாதிரியான தேர்தல்களின்போது புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் குறிப்பிட்டளவிலான நிதிப்பங்களிப்பினை இந்தக் கட்சிகளுக்கு வழங்கும். ஆனால் இம்முறை தேசிய மக்கள் சக்தியின் அலை ஓங்கியிருப்பதனால், தோற்கப் போகும் பந்தயத்திற்கு ஏன் பணத்தைச் செலவிடவேண்டும் என்கிற மனநிலையில் இருக்கின்றனர் புலம்பெயரிகள். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக இருக்கின்ற தேசிய மக்கள் சக்திக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கட்சிக்கோ விளம்பரங்கள் செய்வதற்கு சமூக வலைதளங்கள் போதுமானவை. இரண்டு தரப்பிடமும் பலமான சமூக வலைதளக் கட்டமைப்பு உண்டு. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இவ்வாறானதொரு கட்டமைப்பு இல்லை. மரபார்ந்த பரப்புரை உத்திகளுடனேயே தேர்தலை எதிர்கொள்ள அவை தயாராகின்றன. மரபார்ந்த பரப்புரைகளுக்கு அதிக நிதி தேவைப்படும். கட்சிகளிடமும், புலம்பெயர் அமைப்புக்களிடமும் போதிய நிதியின்மை காரணமாக, இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகளால் பரப்புரைகளைக்கூட சரியாக செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளது.

இவ்வளவு சிக்கல்களையும், தடைகளையும் கடந்தே தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. குட்டித் தேர்தல் எனப்படும் இந்த உள்ளூராட்சி தேர்தலானது, தமிழர் தேசத்தின் மிகச்சிறிய அலகான பிரதேச சபைகளின் ஆளுகையைத் தீர்மானிக்கின்ற முக்கியமான தேர்தல். பிரதேச சபைகளின் ஆளுகையையும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இழக்குமாயின், தமிழ்த் தேசத்தின் மொத்த இயக்கத்தினையும் தெற்கிடம் இழந்தநிலையே ஏற்படும். வீதிக்குப் பெயர் மாற்றுவதிலிருந்து, பௌத்த விகாரைகளுக்கு அனுமதி வழங்குவது தொடக்கம் குறித்த பிரதேசத்தின் மொத்த சாதகத்தையும் தீர்மானிக்கின்ற பொறுப்பு தெற்கு கட்சிகளிடம் செல்லும். இப்படியான ஓர் ஆபத்தான கட்டத்திலேயே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் தற்போது தமிழர் முன் வந்துநிற்கிறது.

# அகம், புறம், சங்க(ம)ம்

## மறம்புகல் மழகளிறு உறங்கும்

உலக மகளிர் தினம் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது என்பது நாம் எல்லாரும் அறிந்தது தானே. அதையொட்டி இணையத்தில் உள்ள அனைத்து சமூக ஊடகங்களிலும் திடீரென்று மகளிர் மாண்பினைப் போற்றும் சுட்டிகள், பதிவுகள் ,காணொளிகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. இப்படி பெண்மையைப் போற்றும் ஆண் மகன்களை எண்ணி எனக்கு கண்ணீர் சுரந்தது. இது எல்லாம் ஒரு நாள் கூத்து என்பது நம் அனைவருக்கும் தெரிந்தது தானே. வடிவேலு ஒரு திரைப்படத்தில் காலையில் எழுந்தவுடன் நன்றாக சாமி எல்லாம் கும்பிட்டுவிட்டு தனது தாய் தந்தையரை தெய்வமாக எண்ணி வணங்கிச் செல்வார். அதே நாள் இரவில் நன்றாக சாராயம் குடித்துவிட்டு வந்து ,அதே தாய் தந்தையரை கண் மூடித்தனமாக தகாத வார்த்தைகளில் திட்டி ,அடித்து விடுவார். இது ஒவ்வொரு நாளும் நடக்கும் காரியம். இந்தக் கூத்தினைப் போலத்தான் மகளிர் தினக் கொண்டாட்டப் பதிவுகளும் என்பது தான் நிதர்சன உண்மை. இந்தப் பதிவினை எழுதிக்கொண்டிருக்கும் இதே வேளையில், சிட்னியைச் சேர்ந்த ஒரு புலம்பெயர்ந்த இந்தியப் பிரபலர் ஒருவர், 39 பாலியல் பலாத்கார வழக்குகளில் சிக்கி 40 வருட ஆயுள் தண்டனைக்குள்ளான செய்தியைக் கேட்டு துயருண்டேன்.

ஆண்டாண்டுகாலமாக பெண்களின் நிலை மாறாமல் அப்படியே தான் இருக்கிறது. இப்பொழுது எவ்வளவோ பரவாயில்லை .பெண்களுக்கு வாய்ப்புகளும் ,வசதிகளும் இருக்கின்றன. ஆனால் பெண் என்கிற வளையத்தினை விட்டுவந்து அந்த வாய்ப்புகளை பயன்படுத்த முடிகிறதா?. அது கேள்விக்குறி தான். இப்பொழுதே இப்படி நிலைமையென்றால் சங்ககாலத்தில் பெண்களின் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்று அறுதியாகச் சொல்ல முடியவில்லை. சங்க காலத்தில் மகளிரின் வீரத்தைப் போற்றும் பாடல்களும், இல்லையெனில் கணவனை / காதலனை எண்ணி உருகும் பாடல்களையுமே பார்க்க முடிகிறது. கவனிக்கவும் ,நாம் அகநானூறு மற்றும் புறநானூறு பற்றிய பாடல்களை பற்றி மட்டுமே இந்தத் தொடரில் எழுதி வருகிறோம். அவ்வாறென்றால் இந்தக் கட்டுரையை எப்படி எழுதுவது என்று ஒரு மாதகாலமாக நான் தொடர்ந்து பல்வேறு அக / புற நானூறு பாடல்களை அலசி வந்தபோது இந்தப் பாடலைக் கண்டேன். இயற்கையிடம் இருந்து தாம் கற்ற இசையைப் பெண்கள் சுதந்திரமாக பாடித்திரிந்ததையும் சங்க இலக்கியத்தில் பதிவுசெய்து வைத்துள்ளனர். அவர்களால் சுதந்திரமாக இருக்க முடிந்திருக்கிறது. கொடிச்சி ஒருத்தி குறிஞ்சிநிலப் பெண் - மலைநாட்டுப் பெண் குறிஞ்சி நிலம் சார்ந்த பாடலைப் பாட, யானை உறங்கிற்றாம். அதாவது பாடலைப் பாடி யானையை உறங்க வைக்கும் வலிமை இருந்திருக்கிறது.

**பாடல் : அகநானூறு - களிற்றியானைநிரை ( 102 )**

**பாடியவர் : மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்**

**"உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்**
**கழுதில் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென**
**உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு**
**ஐதுவரல் அசைவளி ஆற்றக் கைபெயரா**
**ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்**



**குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும்"**

**- (அகநானூறு: 102)**

**பொருள் :** உளைமான் துப்பின் - சிங்கம் போலும் வலியினனாய், தினைப் பெரும் புனத்து ஓங்கு கழுதில் - பெரிய தினைப்புனத்தில் ஓங்கிய பரணின் கண்ணே , கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென - கானவன் கள்ளுண்டு களித்து இருந்தனனாக, உரைத்த சந்தின் ஊரல் இரும் கதுப்பு - பூசிய மயிர்ச் சாந்தினையுடைய பரந்த கரிய கூந்தலை, ஐதுவரல் அசைவளி ஆற்ற - மெல்லென அசைந்து வரும் காற்றுப் புகுந்து புலர்த்த, ஒலியல் வார் மயிர் கை பெயரா உளரினள் - தழைத்து நீண்ட அக் கூந்தலைத் தன் கையாற் பெயர்த்துக் கோதிக் கொண்டு, கொடிச்சி - அவன் மனைவி, பெருவரை மருங்கில் - அப் பெரிய வரையின் பக்கத்தே, குறிஞ்சி பாட - குறிஞ்சிப் பண்ணைப் பாடி நிற்க, குரலும் கொள்ளாது - தான் கொண்ட தினைக் கதிரினையும் உட்கொள்ளாது, நிலையினும் பெயராது - நின்ற நிலையினின்றும் அகலாது, படாஅப் பைங்கண் பாடுபெற்று - துயில் வரப்பெறாத அழகிய கண் துயில்வரப் பெற்று, மறம் புகல் மழ களிறு ஒய்யென உறங்கும் நாடன் - வீரத்தினை விரும்பிய இளைய களிறு விரைந்து தூங்கும்.

**விளக்கம் :** பெரிய மலைப்பாங்கான பகுதியிலிருந்த (பெருவரை மருங்கு) ஓங்கிவளர்ந்திருந்த தினைப்புனத்துப் பரணில் (கழுதில்) கானவன் கள் (பிழி) உண்டு மகிழ்ந்திருந்தான். அவனது மனைவியின் (கொடிச்சி) உரைத்த, சந்தனச் சாந்து (ஊரல்) பூசியகரிய கூந்தலை (இருங்கதுப்பு) மெதுவாய்வீசும் (ஐதுவரல்) காற்று (அசைவளி) உலர்த்த (ஆற்ற), அவள் தன் கையால் தழைத்த (ஒலியல்) ஈரமான கூந்தலைக் (வார்மயிர்) கோதிக் கொண்டு (உளரினள்) குறிஞ்சிப் பண்ணைப் பாடினாள். தினையை (குரல்) கொய்யாது உண்ணாது (கொள்ளாது), தான் நின்ற நிலையில் இருந்தும் (நிலையினும்) அசையாது (பெயராது) மூடாத பசுமையான கண்ணை (பைங்கண்) மூடிப் பாட்டைக் கேட்ட (பாடுபெற்று), வலிமைமிக்க (மறம்புகல்) இளங்களிறு (மழகளிறு) சீக்கிரமாக (ஒய்யென) உறங்கியதாம். யானை தன் காதை, தலையை, துதிக்கையை, காலை என எந்நேரமும் உடலை அசைத்தபடியே நிற்கும். அத்தகைய யானையை தினைப்புனம் காத்த மலைநாட்டு பெண்ணின் பாடல் தாலாட்டாய் உறங்க வைத்தது. அன்றைய பெண்கள் இயற்கையின் ஆற்றலை இசையால் வெல்லலாம் என அறிந்திருந்தனர் போலும்.



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

இந்தக் கட்டுரையினை எப்படி முடிப்பது என்று யோசித்து கொண்டிருக்கும்பொழுது வழக்கம் போல் வாத்தியார் சுஜாதா அவர்களே துணைக்கு வந்தார். சுஜாதாவினைப் போல் சிறுகதையில் அத்தனை விஷயங்களையும் மிக நைச்சியமாய் சொல்பவர்கள் தமிழில் குறைவு. அவரது மிகவும் புகழ்பெற்ற "சமநீதி" என்றொரு கதையுண்டு. அந்தக் கதையில் பானுமதி என்ற பெண்ணுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை நிர்வாகத்தைச் சேர்ந்த ஆணாதிக்க வர்க்கம், அவருக்கு பதிலாக வேறு ஒரு ஆண் அதிகாரிக்கு கொடுத்துவிடுகிறது. அதனை எதிர்த்து அவள் மேலிடத்தில் புகார் கொடுத்துவிடுகிறாள். அந்த விசாரணை தான் கதையே. அந்த விசாரணையின் போது , மேலதிகாரிகள் அவளை மிக அலட்சியமாக நடத்துவார்கள். அவளின் ஒவ்வொரு கேள்விக்கும் நொண்டிச்சாக்கு சொல்லி வெறுப்பேற்றி ,ஒரு கட்டத்தில் அவள் ,"எனக்கு ப்ரமோஷனும் வேண்டாம் .ஒரு எழவும் வேண்டாம். ரிசைன் பண்ணித் தொலைக்கின்றேன். தினமும் கிரைண்டரில் மாவு அரைச்சுட்டு காலையில் அஞ்சு மணிக்கு எழுந்து , மாமியாருக்கு பத்தியம் சமைச்சு போட்டு எடுத்துவச்சு , பசங்களை தயார் பண்ணி, துணி தோச்சு, பஸ் பிடிச்சு, புருஷனுக்கு கைக்குட்டை வரைக்கும் எடுத்து கையில் கொடுத்து இரண்டு பஸ் பிடிச்சு ஆபிசுக்கு வந்தா நியாயமா கிடைக்க வேண்டிய ப்ரோமோஷன் கூட கிடைக்கல ."என்று அழுதுவிடுவாள். இதற்குத் தான் காத்திருந்தது போல உயரதிகாரி ஆண் வர்க்கம், "உங்களுக்கான பதவி உயர்வு கடிதம் நாளைக்கு உங்கள் டேபிளில் இருக்கும். நீங்கள் போகலாம். எதையும் மனதில் வைத்து கொள்ள வேண்டாம் " என்று சொல்லி அனுப்பிவிடுவார்கள். கதை இங்கேயே முடிந்து விட்டால் அது சுஜாதா கிடையாது. பானுமதி எழுந்து சென்றபிறகு அந்த உயராதிகாரிகள் பேசிக்கொள்வார்கள்,

**" ப்ரமோட் பண்ணிடலாமோல்யோ ? "**

**" தாராளமா .இரண்டு வேகன்சி இருக்கே .ஒன்னு ஹெட் ஆபிசுல. இன்னொன்னு அகர்தாலாவுல."**

**" அகர்தாலாவா ? எங்க இருக்கு அது ?"**

**" திரிபுரால "**

**" அவங்கள அங்கே போஸ்ட் பண்ணிடு"**

இவ்வாறாக கதை முடியும். அதாவது அவளுக்கு என்றுமே பதவியுயர்வு கிடைக்காத படி செய்துவிடுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் இந்த ஆணாதிக்க உலகில் தினம் தினம் கொடுமைகளை அனுபவித்து விட்டு ,ஒரு தினமாவது பெயரளவிலாவது அனைவராலும் கொண்டாடப்படும் மகளிர் தின வாழ்த்துக்கள். ■

# தங்கக் கை மனிதர் காலமானார்!

இரத்த தானத்தின் மூலம் சுமார் 24 லட்சம் குழந்தைகளின் உயிரை காப்பாற்றிய 'தங்கக் கை மனிதர்' என போற்றப்படும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜேம்ஸ் காலமானார்.

இறக்கும்போது அவரது வயது 88 ஆகும்.

தனது 18 வயதில் இருந்து 81 வயது வரை 1,173 முறை இவர் இரத்த தானம் செய்துள்ளார்.

ஜேம்சின், பிளாஸ்மாவில் Anti-னு எனப்படும் அரியவகை அன்ரிபொடி இருந்துள்ளது. இது பிரசவத்தின்போது தாயிடம் இருந்து குழந்தைகளுக்கு பரவும் தீங்கு விளைவிக்கும் அன்டிபொடிகளை தடுக்க உதவி உள்ளது.

ஜேம்ஸ் ஹாரிசனுக்கு 14 வயதில்,



நடத்தப்பட்ட சத்திரசிகிச்சையின்போது, அவருக்கு ஒரு நுரையீரல் அகற்றப்பட்டிருந்தது.

இந்த சத்திரசிகிச்சையின்போது, முகம் தெரியாத பலர் அளித்த 13 யூனிட்கள் இரத்த தானம் மூலம் ஜேம்ஸ் ஹாரிசன் உயிர் பிழைத்தார்.

தான் உயிர் பிழைத்ததற்கு நன்றிக் கடனாக அப்போதே, இரத்த தானம் செய்வதில் விருப்பம் கொண்டிருந்தார்.

இந்தச் சூழலில் ஆஸ்திரேலியாவில், ரீசஸ் நோயினால் பச்சிளம் குழந்தைகள் அதிகம் மரணமடைந்து வந்தனர். இந்த நோய்க்கு தீர்வு ஏற்பட Anti-னு அவசிய மானதாகக் கூறப்பட்டது.

இதனிடையே, ஹாரிசனின் இரத்த பிளாஸ்மாவில், இந்த Anti-னு இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து தனது 18 வயதில் இருந்து இரத்த தானம் செய்யத் தொடங்கி 60 ஆண்டுகளுக்கும் மேலாக, இரத்த தானம் செய்து ஜேம்ஸ் ஹாரிசன் சாதனை படைத்துள்ளார்.

இவரது இந்தச் செயலின் மூலம், சுமார் 24 லட்சம் பச்சிளம் குழந்தைகளின் உயிரை அவர் காப்பாற்றி உள்ளார் என அறிவிக்கப்பட்டது.

தனது 81 வயது வரை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒருமுறை ஜேம்ஸ் ஹாரிசன் இதனை செய்து வந்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக இரத்த தானம் அளிப்பதை ஜேம்ஸ் ஹாரிசன் நிறுத்தினார்.

உடல் நலக்குறைவால் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் குடும்பத்துடன் வசித்து வந்த நிலையில் கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதியன்று தனது தூக்கத்திலேயே இயற்கை எய்தியதாக அவரது குடும்பத்தினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முன்னேற்றம் தரக்கூடிய மாதமாக அமையும். முன்னேற்றம் தரக்கூடிய அத்தனை விஷயங்களையும் மாதத் தொடக்கத்திலேயே செய்து விடுங்கள். மாத இறுதியில் கொஞ்சம் மந்தமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆரோக்கியத்தில் கவனம் இருக்க வேண்டும். வாரந்தோறும் திங்கட்கிழமை விநாயகரை வழிபடுங்கள்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கூடுதல் பொறுப்புவரப்போகிறது. நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையிலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். வியாபாரத்திலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். ஆனால் வேலை செய்யக்கூடிய நேரம் கொஞ்சம் அதிகரிக்கும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். குழந்தைப் பாக்கியம் வேண்டி காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதானம் தேவைப்படுகிறது. அவசரமாக எந்த முடிவையும் எடுக்கக் கூடாது. குறிப்பாக பணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். வியாபாரத்தில் முதலீடு செய்வதற்கு முன்பு ஒன்றுக்கு பலமுறை யோசிக்கவும். நீண்ட தூரப் பயணங்கள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது. ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும். குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பொறுமை தேவை. செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை அம்மன் வழிபாடு உங்களுக்கு நன்மையைச் செய்யும்.

## கடகம்

கடக ராசிக்காரர்கள் இந்த மாதம் சௌகரியமாக வாழப் போகிறீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு தேவையான அத்தனை நல்லதையும் திட்டமிட்டு செய்து, எந்தெந்த வேலைகளை எந்தெந்த நேரத்தில் முடிக்க வேண்டும் என்று சரியாக வழிநடத்திச் செல்வீர்கள். ஆனால் ஆரோக்கியத்தில் கவனம் இருக்க வேண்டும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டு. வியாழக்கிழமைகளில் குரு பகவான் வழிபாடு உங்களுக்கு நன்மையைச் செய்யும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்கள் இந்த மாதம் முழுவதும் வெற்றிவாகை சூடப் போகிறீர்கள். புதிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். புதிய வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு காத்துக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அத்தனை சந்தர்ப்ப சூழ்நிலைகளும் உங்களுக்கு கைகூடி வரும். வீட்டில் இருந்து வந்த நீண்ட நாள் பிரச்சினைகள் சரியாகும். சந்தோஷம் இருக்கும். காதல் கைகூடும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தேவையற்ற பிரச்சினைகள் வந்து போகும் மாதமாக இருக்கும். நல்லது வரும்போது அதிக சந்தோஷப்படுவதும், கெடுதல் வரும்போது துவண்டு போய் அமர்வதும் கூடாது. கெடுதலை எதிர்த்துப் போராடக்கூடிய தைரியம் இந்த மாதம் உங்களிடத்தில் தேவைப்படுகிறது. நல்ல நண்பர்கள், நல்ல சூழல் என்பவற்றை உருவாக்கிக் கொள்ளுங்கள். நிச்சயம் உங்களுக்கான நல்லது நடக்கும். விடா முயற்சியுடன் செயற்படுங்கள்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்கள், இந்த மாதம் பணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். வீண் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை தேவை. குடும்பத்தை தம்பதியர் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து கவனித்தால் மட்டுமே இந்த மாதம் வரும் பிரச்சினையிலிருந்து தப்பமுடியும். வியாபாரம் செய்தாலும் வேலைக்குச் சென்றாலும் நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்று இருக்க வேண்டும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கொஞ்சம் ஏற்றம் இறக்கம் நிறைந்த மாதமாக தான் இருக்கும். இந்த மாத ஆரம்பத்தில் சில பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் வரும். மாதத்தின் கடைசி இரண்டு வாரங்கள் நீங்கள் நினைத்த வேலைகளை எல்லாம் சரியாகச் செய்து முடிப்பீர்கள். மாதத்தின் முதல் பாகம் முயற்சிகளை முழுமூச்சோடு செய்யுங்கள். மாதத்தின் இறுதிக்கட்டத்தில் சந்தோஷமாக இருக்கலாம்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதிநிலைமை கொஞ்சம் சீர்படும். தேவையற்ற கடன் பிரச்சினையில் இருந்து வெளிவருவீர்கள். இறைவனின் அருளால் வருமானமும் அதிகமாக இருக்கும். சேமிப்பை அதிகப்படுத்துங்கள். வீண் விரயச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். வேலையிலும் வியாபாரத்திலும் நீங்கள் நினைத்த மாற்றத்தை கொண்டு வரலாம். புதிய தொழில் ஆரம்பிக்கலாம். வீட்டில் திருமணமாகாதவர்களுக்கு திருமணப் பேச்சுவார்த்தையை நடத்தலாம்,

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு எதிரிகளால் உண்டான பிரச்சினைகள் நீங்கும். சொந்த பந்தங்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் விலகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை ஏற்படும். வியாபாரத்தில் நீங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் முன்னேற்றப் பாதையில் செல்லும். வேலையில் இருக்கும் பிரச்சினைகள் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும், வரக்கூடிய நாட்களில் பிரச்சினைகளின் தாக்கம் குறையும். சனிக்கிழமைகளில் பெருமாளையும் தாயாரையும் சேர்த்து வழிபடுங்கள்,

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பிரச்சினைகளிலிருந்து விடுபடக்கூடிய மாதமாக இருக்கும். வியாபாரத்தில் முன்னேறுவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். வங்கிக் கடனுக்கு முயற்சி செய்யலாம். நண்பர்கள் மூலமும் உறவுகள் மூலமும் உங்களுக்கான நன்மை கிடைக்கும். சுற்றி இருப்பவர்களிடம் நல்ல ஆதரவைப் பெறுவீர்கள். வேலையைப் பொறுத்தவரை உங்களுடைய கடின உழைப்பு நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கூடுதல் கவனம் தேவை. மாதத் தொடக்கத்திலேயே பணத்தை வாரி இறைக்க கூடாது. மாத இறுதிக் கட்டத்திற்கு தேவையான ஒரு தொகையை எடுத்து வையுங்கள். அப்போதுதான் சமாளிக்க முடியும். கடன் பிரச்சினை அதிகமானால் எதிர்காலத்தில் பிரச்சினையும் அதிகமாகும் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கைபேசி பயன்படுத்துவதை குறைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நினைத்ததை விட மிகப்பெரிய நல்லது நடக்கும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

Transsco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU